விலை ரூபா 1—25

# ஈழநாடு

NATIONAL THAMIL DAILY

மலர் 28 மார்கழி 16 ச. ஆகிர் 28 இதழ் 320

யாழ்ப்பாணம் புதன்கிழமை 31 12 1986

UNIVERSITY OF ... PERIODICAL DIVISION LIBRARY

## இரு வருடங்களுக்கு பின்னர் யாழ் - திருமலை பஸ்சேவை நாளை முதல் ஆரம்பம்

யாழ்ப்பாணம், புதன். நாட்டில் நிலவும் பதற்ற நிலை காரணமாகக் கடந்த இரண்டு வருடங்களுக்கு மேலாக இடைநிறுத்தப்பட்டிருந்த யாழ்ப்பாணம் - திருமலை பஸ் சேவை மீண்டும் நாளை 1ம் திகதி முதல் ஆரம்பமாகும்.

யாழ்ப்பாணம் பஸ் டிப்போவும், திருமலை பஸ் டிப்போவும் இணைந்து இச்சேவையை நடாத்தவுள்ளன.

யாழ். பஸ் நிலையத்திற்கு நாளைமுதல் தினமும் காலை 5-30 மணிக்கு வரும் திருமலை டஸ் காலை 6 மணிக்குப் புறப்படும். இந்த டஸ் மாலை 6 மணிக்கு திருமலையை அடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

இதேபோல் நாளை முதல் தினமும் காலை 5-30 மணிக்கு திருமலை டஸ் நிலையத்திற்கு வரும் யாழ்ப்பாணம் டஸ் காலை 6 மணிக்கு அங்கிருந்து புறப்படும். அது யாழ் பஸ்

(5-ம் பக்கம் பார்க்க)

# உயிலங்குளத்தில் கண்ணிவெடி 5 படையினர் பலி; 2 பேர் காயம்

## மன்னாரில் நேற்று பூரண ஹர்த்தால்

(நமது நிருபர்)

மன்னார் உயிலங்குளத்தில் நேற்றுக் காலை ரோந்துசென்ற பாதுகாப்புப் படையினர் மீது கண்ணிவெடித் தாக்குதல் நடத்தப்பட்டதில் ஐந்து இராணுவத்தினர் பலியானதாக ஊர்ஜிதமற்ற செய்திகள் தெரிவிக்கின்றன. இருவர் காயமடைந்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

உயிலங்குளத்திற்கும் பரப்பங்கண்டலுக்குமிடையிலுள்ள கார்தார் கோயில் சந்தியில் நேற்றுக் காலை பத்துமணியளவில் இக் கண்ணிவெடித்தாக்குதல் போராளிகளால் நடத்தப்பட்டது.

ராணுவ வாகனங்களிலும் கால்நடையாகவும் ரோந்து வந்தபடையினர் மீது நடத்தப்பட்ட இந்தக் கண்ணிவெடித் தாக்குதல் சம்பவத்தையடுத்து உயிலங்குளத்தில் பெரும் பதற்றம் ஏற்பட்டது.

கண்ணிவெடித் தாக்குதலை நடத்த போராளிகள் துப்பாக்கிப் பிரயோகம் மேற்கொண்ட படையினர் மீது மறைந்திருந்து நிலையை நிலைகுலைந்து ஓடிய

(8ம் பக்கம் பார்க்க)

## "எந்தவொரு தமிழ் குழுவுக்கும் கியூபாவில் அலுவலகமில்லை" இலங்கைக்கான கியூபா தூதுவர்

கொழும்பு செவ். இலங்கையிலுள்ள தமிழ்க் குழுக்கள் எவற்றிற்கும் கியூபாவில் அலுவலகங்கள் எதுவும் கிடையாது என இலங்கைக்கான கியூபா தூதுவர் திருமதி ஒல்கா ட்ரையாஸ் தெரிவித்துள்ளார்.

ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணிக்கு கியூபாவிலும், நிகரகுவாவிலும் அலுவலகங்கள் உள்ளனவென நியூயோர்க்கிலிருந்து வெளியாகும் 'இந்தியா ஏ. ரோட்' என்ற பத்திரிகை செய்தி வெளியிட்டிருந்தது. இதுசம்பந்தமாகவே திருமதி ட்ரையாஸ் இதனைத் தெரிவித்தார்.

திருமதி ட்ரையாஸ், இலங்கையிலுள்ள எந்தத் தமிழ்க் குழுவுடனும் கியூபா அரசுக்கோ,

(5ம் பக்கம் பார்க்க)

## இலங்கை இனப்பிரச்னை அடுத்த கட்ட சென்னைப் பேச்சுக்களில் அமைச்சர் லலித் பங்குபற்றுவார்?

சென்னை டிச 30. இலங்கை இனப்பிரச்னை தொடர்பாக மேற்கொள்ளப்படும் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் அடுத்தகட்ட பேச்சுவார்த்தைகள் சென்னையில் நடைபெறும் பட்சத்தில் அதில் இலங்கை தேசிய பந்தோபஸ்து அமைச்சர் திரு. லலித் அத்துலத் முதலியும் பங்கு பற்றுவாரென எதிர்பார்க்கப்படுவதாக ராஜதந்திர வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இவ்வாறான பேச்சுவார்த்தைகளில் போராளிகளின் நிலைப்பாடு என்ன என்பது பற்றி தெரியவில்லையெனினும் கடந்த சில மாதங்களாக நடைபெற்று வரும் சம்பவங்கள் மூலம் இவ்வாறான சமாதானப் பேச்சுவார்த்தைகளில் இனி வரும் காலத்தில் போராளிகள் குழுக்களும் கலந்து கொள்வார்களென எதிர்பார்க்கப்படுவதாகவும் அவ் வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. (சி)

## மூப்பனார் வேண்டுகோள்

சென்னை டிச 30. இலங்கை இனப்பிரச்னையை சமாதானமான முறையில் தீர்த்து வைப்பதற்கு இலங்கை அரசு, போராளிகள் தரப்பினர் தமது முழு ஒத்துழைப்பையும் வழங்க வேண்டுமென்று காங்கிரஸ் பொதுச் செயலாளர் திரு. கருப்பையா மூப்பனார் வேண்டுகோள் விடுத்துள்ளார். (சி)

## வல்வெட்டித்துறையில் இராணுவத்தினர் மீது புலிகள் 'கனன்சார்ஜ்' தாக்குதல்

யாழ்ப்பாணம், புதன். வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து நேற்று வெளியேவர முயன்ற இராணுவத்தினர் மீது தமிழீழ விடுதலைப் புலிகள் நடத்திய தாக்குதலினால் பின்வாங்கி முகாம் திரும்பினர்.

நேற்று நண்பகல் ஒருமணியளவில் வல்வெட்டித்துறை இராணுவ முகாமிலிருந்து வெளிவந்த சுமார் 50 இராணுவத்தினர் 'மோட்டார் ஷெல்' தாக்குதல் நடத்தியவண்ணம் மயிலியதனை நோக்கி முன்

(5-ம் பக்கம் பார்க்க)

## தமிழகத்தில் அரசுக்கு சொந்தமான ஜீப் லொறி தீக்கிரை; 8 பேர் கைது

சென்னை, டிச 30. தமிழ் நாட்டின் சகலபகுதிகளினதும் பாதுகாப்பு நடவடிக்கைகள் குறித்து மாநிலத்தின் பகுதிகளிலும் பந்தோபஸ்து நடவடிக்கைக்கான மாநாடுகள் நடைபெற்று வருகின்றன.

### பாதுகாப்பு நடவடிக்கைகள் தீவிரம்

தமிழகத்தில் வெடிமருந்து மற்றும் அது தொடர்பான பொருட்களை விற்கும் கடைகள் தொடர்ந்தும் சோதனை செய்யப்படுவதாகவும், சமூக

(5ம் பக்கம் பார்க்க)

## தீவுப்பகுதியில் கடற்படை நடவடிக்கை தீவிரம்

புங்குடுதீவு, செவ். புங்குடுதீவுக் கடற் பகுதியில் மீண்டும் கடற்படையினரின் ரோந்துக் கப்பல்கள் வரிசையாக அடுக்கி வைத்தது போன்று நங்கூரமிட்டு நிற்கின்றன.

இக்கப்பல்கள் பாலைதீவு, மண்டைதீவு, நெடுந்தீவு ஆகிய பகுதிகளுக்கு அண்மையில் ஒவ்வொரு கப்பல்களும் ஒவ்வொரு பகுதிக் கடலிலும் காணப்படுகிறது.

இவற்றின் உதவியுடன் பல விசைப் படகுகளும் இரவு பகலாகத் தமது ரோந்து சேவையினை நடத்திவருகின்றன.

இதனால் கடற்றொழிலாளர்கள் அச்சமடைந்து தொழிலுக்குப் போகமுடியாத நிலையில் உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இது இவ்வாறிருக்க சீப்ளேனின் நடமாட்டமும் இப்பகுதியில் தீவிரமடைந்துள்ளது.

## நகை அடைவு வைத்தோர் போராட்டம் தொடர்கிறது

யாழ் புதன். யாழ்ப்பாணத்தில் மக்கள் வங்கிக்கிளைகளில் நகைஅடைவு வைத்தோரின் மறியல் போராட்டம் நேற்றும் நடைபெற்றது.

### சாவகச்சேரியிலும்

சாவகச்சேரி மக்கள் வங்கியிலும் அடைவு வைத்தோரின் மறியல் போராட்டம் நடை

[5ம் பக்கம் பார்க்க]

## கிளிநொச்சி சம்பவங்கள் மூன்று பொதுமக்கள் பலி பல கட்டிடங்கள் சேதம்

[நமது கிளிநொச்சி நிருபர்]

கிளிநொச்சி இராணுவம் நேற்றுமுன்தினம் முகாமை விட்டு வெளியேறிப் பரந்தனை நோக்கித் துப்பாக்கி வேட்டுக்களைத் தீர்த்துக் கொண்டு சென்ற சம்பவத்திலும், அதிகாலையிலிருந்து மேற்கொள்ளப்பட்ட ஆகாயத் தாக்குதலிலும் மூன்று பொது மக்கள் பலியாகியும், பலர் படுகாயமடைந்துமுள்ளனர்.

ஆகாயத் தாக்குதலால் பல வீடுகள், கடைக் கட்டிடங்கள் தரைமட்டமாகியும் பரந்தன் பகுதிகளில் இடிந்து நாசமாகியுமுள்ளன. கொழும்பிலிருந்து தந்தையின் சுகவீனத்திற்காகப் பரந்தனை வந்தடைந்த உருத்திரபுரம் ... 

(8-ம் பக்கம் பார்க்க)

## சாஸ்திரி கூழாங்குளத்தில் கைதான இணக்கசபை உறுப்பினர்களை விடுவிக்க வன்னி இணைப்பதிகாரி சம்மதம்

வவனியா, செவ். சாஸ்திரி கூழாங்குளத்தில் நேற்றுக் காலை கைதுசெய்யப்பட்ட ஐந்து இணக்கசபை உறுப்பினரையும் விடுவிப்பதற்கு வவனியா இணைப்பதிகாரி பிரிகேடியர் டெனசில் கொப

(5-ம் பக்கம் பார்க்க)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வரி விளம்பரம்

## விற்பனைக்கு

நத்தார் புதுவருட வாழ்த்துக்கள், திருமண அழைப்பிதழ்களும், சகல விலைகளிலுமான முத்திரை வகைகளும் பெற்றுக்கொள்ள அரஸ் ஜவுளி அகம், 146, நவீன சந்தை, யாழ்ப்பாணம் தொலைபேசி: 24001 [C6299]

நல்ல இன செவ்விளநீர் கன்று விற்பனைக்கு உள்ளது. தேவையானோர் தொடர்பு கொள்க. பிள்ளையார் ஸ்ரோர்ஸ் 31, மானிப்பாய் வீதி, யாழ்ப்பாணம்.
A 3411

Broiler இறைச்சிக் கோழிகள் நியாயமான விலைக்கு பெற்றுக்கொள்ளலாம். சுத்தம் செய்து கொடுக்கப்படும். Nallur Farm Centre, [நல்லூர் வீடியோ சென்ரர்] 19, முருகேசர் ஒழுங்கை, நல்லூர். (C 6402]

நல்ல நிலையில் உள்ள Honda CG 125, Akai stereo cassette recorder விற்பனைக்குண்டு. உடன் தொடர்பு கொள்ளவும் S செல்வன், 326 பிரதான வீதி, யாழ்ப்பாணம். (C 6639]

அலுமினியத் தொழிற்சாலையின் சிறு பழுதடைந்த பாத்திரங்கள் மிக மலிவு விலையில் கொடுக்கப்படும். [பானைகள்-சட்டிவகைகள்) கையிருப்பு சொற்பமே முந்துங்கள் அத்துடன் புதிய பாத்திரங்களும் தொழிற்சாலை விலையில் 14-01-1987 வரை கொடுக்கபடும். பேள் உலோகத் தொழிற்சாலை, 384 60) மணிக்கூட்டு வீதி யாழ்ப்பாணம். (பெருமாள் கோவிலுக்கும் வெலிங்டன் சந்திக்குமிடையில்) (C 6651)

வேலணை சரவணையில் நாகேஸ்வரி வித்தியாசாலைக்கும் பிரதான வீதிக்கும் அண்மையில் கல்வீடும் கிணறும் கொண்ட ஐந்து பரப்புக் காணி உடன் விற்பனைக்குண்டு தொடர்பு கொள்க; செல்லப்பா பேரின்பநாதன், சரம்பொன் கிழக்கு, ஊர்காவற்றுறை. [C66 0]

## சேவை

135 M. M. கலர் பிலிம் சுருள்கள் எதுவானாலும் Processing and Printing செய்பவர்களுக்கு போஸ்காட் சைஸ் ரூபா 4-75 Processing only 20/- விபரங்களுக்கு கொழும்பு ஸ்ருடியோ, யாழ்ப்பாணம். A-3357

குளிர்சாதனப் பெட்டிகள் சீர்அமைக்க மண்ணெண்ணை குளிர்சாதன பெட்டிகளை நவீன முறையில் மாற்றி அமைக்க, ஸ்பிறே வர்ணம் தீட்ட பென்குவின் ஏயர்கொன் என்ஜினியர்ஸ், A. B. சபாநாதன், and C. கோபாலரத்தினம், 14, மணல்தறை லேன், கந்தர்மடம். C 6516

## வகுப்புக்கள்

Radio, T. V. வயறிங், வெல்டிங், பிளம்பிங், மோட்டோர் மெக்கானிசம், தட்டெழுத்து, சுருக்கெழுத்து புதிய பிரிவுகள் ஆரம்பமாகவுள்ளன. சான்றிதழ் பெறுமதியானது தொடர்பு:- Vispa Engineering Hall, 328, நாவலர் வீதி. யாழ்ப்பாணம். (C-6502)

ஆண்டு 4, 5, 6, 7, 8, 9 புதிய வகுப்புக்கள் ஆரம்பம் 2-01-1987, மொடேன் எடியுகேசன் சென்ரர், கரவெட்டி. (C 6531]

## CLASSES

English Shorthand Type-writing six months Rapid course commencing fifth January 1987, Arasaratnam Beuthel, 3, Somasundaram Avenue. [G 6623]

## பயிற்சி

றேடியோ - ரெலிவிஷன் ரெலெக்ஸ் ஒப்பறேற்ரேஸ் இன்றநஷனல் (இருபாலாரும்) றேடியோ ஒவ்விசேஸ் (கப்பல்) வெளிநாடுகளில் பிரபல்யமானவை. சான்றிதழ்கள் வழங்கப்படும். ஆரம்பம்: 2-1-1987 எலக்ரோஸ், திருநெல்வேலி சந்தி. C-6561]

## மணப்பந்தல்

குரு குலத்தைச் சேர்ந்த 32 வயதான சட்டத்தரணியாகத் தொழில் புரியும் கத்தோலிக்கப் பெண்ணுக்கு. உயர் தொழில் புரியும தகுதியான மணமகன் தேவை. சீதனமாக காணி, நகை, ரொக்கம் கொடுக்கப்படும் மணமகனின் முழுவிபரங்கள் தேவை விளம்பர இல 6622 மே/பா. ஈழநாடு, யாழ்ப்பாணம், (C6622]

இந்து உயர்வேளாள குல ஏ/எல பாஸ் செய்த 7ல் செவ்வாயுள்ள அழகிய 26 வயது சகோதரிக்கு சைவ, தீய பழக்கங்கள் இல்லாத மணமகன் தேவை சாதகக்குறிப்புடன், தொழில் எதிர்பார்க்கும் சீதனம் ஆகியவை குறிப்பிடவும் தரகர் தேவையில்லை. விளம்பர இல. 6635, மே/பா ஈழநாடு, யாழ்ப்பாணம். (C 6635)

யாழ்ப்பாணம் உயர் சைவ வேளாளர் குடும்பத்தைச் சேர்ந்த 5' 10'' உயரமும் 27 வயதுமுடையபிரான்சில் நிரந்தர விசாவுடன் உத்தியோகம் பார்க்கும் விடுமுறையில் இலங்கைக்கு வர இருக்கும் மணமகனுக்கு அழகிய நற்குணமுடைய செவ்வாய்க் குற்றமற்ற மணமகள் தேவை. சாதகக் குறிப்பு சீதன விபரங்களோடு விண்ணப்பிக்கவும். விளம்பர இல C 6593 C/o ஈழநாடு யாழ்ப்பாணம். (C6593)

## தசாக அழைப்பு

நிகழும் அக்ஷய வருடம் மார்கழி மாதம் 9-ம் நாள் (24-12-86) புதன்கிழமை பின்னிரவு இறைவன் திருவடி நீழல் அடைந்த என் அன்பு நிறை அக்கா,

**திருமதி செல்லம்மா தியாகராஜக்குருக்கள்**

அவர்களின் அந்திமக் கிரியைகள் வருமாறு:-

மார்கழி மீ 18உ (2-1-87) வெள்ளி காலை தசாகம் (கல்லெடுப்பு) காலை 10 மணி.

மார்கழி மீ 19உ (3-1-87) சனி மாசிகம்.

மார்கழி மீ 20உ (4-1-87) ஞாயிறு சபிண்டீகரணம்

மார்கழி மீ 21உ 5-1-87) திங்கள் கிருஹயக்ஞம் சுத்தி புண்யாகம் சமாராதனை.

அக்காவின் ஆத்மசாந்திக்கிரியைகளில் அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்.

இவ்வண்ணம்
மா. குமாரஸ்வாமி சர்மா
குடும்பத்தினர்,
கும்பிட்டான்புலம்,
வரணி வடக்கு,
வரணி. [C-6635]

## பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழ. இல. தத்துவம் / 300

சுன்னாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்வரத்தினம் சிவஞானத்தின் மரணசாதனமற்ற சொத்துக்கள் பற்றிய விடயம்.

மரணமெய்தியவர்

செல்வரத்தினம் மகள் இராஜராஜேஸ்வரி. சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.
மனுதாரர்.

எதிர்

1. சரவணமுத்து கனகராசாவும்
2. பெண் ஜெகதீஸ்வரியும் இருவரும் சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.
3. சிவஞானம் கைம்பெண் ஜசிந்தா, 7ம் கட்டையடி, சங்கானை.

எதிர்மனுதாரர்கள்.

மேலேயுள்ள இலக்கம் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர்குறிப்பிடப்பட்ட மரணமெய்தியவரின் மரணச் சொத்தை நிர்வகிப்பதற்கு மேற்படி நீதிமன்றில் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது.

அக்கறையுள்ள எவரேனும் பதியப்பட்ட பின்னுறுதிகட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படக் கூடாதென்பதற்குக் காரணம் ஏதும் இருப்பின் 1987ம் ஆண்டு ஜனவரி மாதம் 21ம் திகதி காலை 9 மணிக்கு இந்நீதிமன்றல் தோன்றி தெரிவிக்குமாறு இத்தால் தேவைப்படுத்தப்படுகின்றனர்.

1986-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29-ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
ஆழ்வார் சிவபாதசுந்தரம்,
பதிவாளர்.
மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்.

வரைவு:
V. S, கணேசலிங்கம்,
மனுதார் தரணி. [C-6644]

## ஓராண்டு நினைவு அஞ்சலி

Mother and Father are the Visible Gods
— கொன்றைவேந்தன் 1



**திருமதி பாக்கியம்நடராசா (கொட்டடி)**

காலஞ்சென்ற பொலநறுவை P. W. D. ஓவசியர் அமரர் ச. ஆ. நடராசா அவர்களின் அன்பு மனைவி

தோற்றம் : 20-02-1902
மறைவு : 31-12-1985

உமது ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

மகன்: யோகநாதன், யோகசுந்தரம், மருமக்கள், பேரப்பிள்ளைகள், உற்றார், உறவினர்
திருவள்ளுவர் அவெனியு, கந்தர்மடம், யாழ்ப்பாணம். C 6646

## பின்னுறுதிக்கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

சுன்னாகத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற செல்வரத்தினம் கைம்பெண் பத்மாவதியின் மரணசாதன சொத்துக்கள் பற்றிய விடயம்.

மரணமெய்தியவர்.

இல: தத்துவம் / 302

செல்வரத்தினம் மகள் இராஜராஜேஸ்வரி. சுன்னாகம் தெற்கு, சுன்னாகம்.

மனுதார்:

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதனவழக்கு மேலே பெயர் குறிப்பிடப்பட்டுள்ள மரணமெய்தியவரின் மரணசாதனத்தை நிரூபிக்க மேற்படி நீதிமன்றில் தொடரப்பட்டு அதில் அதற்கிணங்க பின்னுறுதிக்கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவித்தல் தரப்படுகின்றது

அக்கறையுள்ள எவரேனும் பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுன கட்டளையாக்கப்படக்கூடாது என்பதற்குக் காரணம் ஏதும் இருப்பின் 1987ம் ஆண்டு ஜனவரி மாதம் 28ம் திகதி காலை 9-00 மணிக்கு இம்மன்றில் தோன்றி தெரிவிக்குமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றனர்.

1986ம் ஆண்டு டிசம்பர் மாதம் 29ம் திகதி.

நீதிமன்றக்கட்டளைப்படி,
வி. இராமச்சந்திரஐயர்,
பதிவாளருக்காக
மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்.

வரைவு:
V. S, கணேசலிங்கம்,
மனுதார் தரணி. (C 6545

## இசைத்தமிழ் மன்றம்

யாழ்ப்பாணம், புதன் யாழ்ப்பாணம் அண்ணாமலை இசைத் தமிழ் மன்றத்தின் பொதுக்கூட்டம் எதிர்வரும் ஞாயிற்றுக்கிழமை காலை யாழ்/ஸ்தான சி. சி. த. க. பாடசாலையில் நடைபெறவுள்ளது.

## காலமானார்

(புது டில்லி]

பிரபல கேலிச்சித்திரக்காரரான திரு பியேட் மெக்சிக் கோவில் காலமானார். இவருக்கு வயது 76 ஆகும். (வா]

## மார்புநோய் சிகிச்சை நிலையத்திற்குக் கட்டிடம்

யாழ்ப்பாண நகரை அண்மித்துள்ள இடமொன்றில், பண்ணையில் நடைபெற்று வந்த மார்புநோய் சிகிச்சை நிலையத்தை (Chest Clinic) திருவவேண்டியிருப்பதனால், அதற்கு 2000—2500 சதுரஅடி வரை இடவசதியுள்ள வீடு ஒன்று அவசியமாகின்றது; இதற்கு நியாயமான வாடகை கொடுக்கப்படும். விரும்புவோர் உடனடியாக எமது விலாசத்திற்கு விண்ணப்பிக்கவும்.

வை. மு. பஞ்சலிங்கம்.
யாழ்ப்பாண மாவட்ட செயலாளரும்,
அரசாங்க அதிபரும்.
A 3414

இலங்கையில் முதல் ஒடியோ கிளப் ஆரம்பித்த ஒருவருட நிறைவை முன்னிட்டு

## நியூ விக்ரேஸ்

புதுவருட

## மலிவு விற்பனை

★ சிறுவர்களுக்கு ஏற்ற விளையாட்டுப் பொருட்கள்
(ரூபா 15/-முதல் 200/-வரை)

★ பாடல்கள் பதித்த ஒடியோ ஒறிஜினல் C 60 மகசல் கசற்
[ரூபா 29/50]

[புதிய சினிமாப் பாடல்கள் ஒலி 1 முதல் 90]
[பழைய ,, ,, 1 ,, 69]
[பக்திப் பாடல்கள் ,, 1 ,, 53]
[கதை வசனங்கள் ,, 1 ,, 30]

நாதஸ்வரக் கச்சேரிகள், நகைச்சுவைகள் இன்னும் பல

முடிவு: 1-1-87

## நியூ விக்ரேஸ்

23, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 23532 [A 3415]

## கொக்குவில் இந்துக் கல்லூரி
## கொக்குவில்

## ஆண்டு 6க்கான (தரம் 5)

# அனுமதிப்பரீட்சை
## 1987

01-02-76க்குப் பின் பிறந்த மாணவர்கள் மாத்திரம் விண்ணப்பிக்கலாம். பரீட்சைக் கட்டணம் (விண்ணப்பப் பத்திரம் உட்பட) ரூபா 5-50 சதம்; விண்ணப்பப் படிவத்தை பாடசாலைக் காரியாலயத்தில் பெற்றுக்கொள்ளவும்.

விண்ணப்பக் கடைசித் திகதி 24-01-1987

அதிபர்.
[A 3417]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வல்லரசுகள் அணு ஆயுத உற்பத்தியை நிறுத்த பேச்சுக்கள் நடத்த வேண்டும்

புதுடில்லி டிச 30

1987ல் அணு ஆயுத உற்பத்தியை முற்றாக நிறுத்துவதற்கு வல்லரசு நாடுகள் விரைவான பேச்சுக்களை மேற்கொள்ளவேண்டும்.

இவ்வாறு சமாதானம் மற்றும் ஆயுத குறைப்பு முன் முயற்சித்த கோரிக்கை விடுத்துள்ள ஐந்து கண்டங்களைச் சேர்ந்த ஆறு நாடுகளின் தலைவர்கள் வலியுறுத்தியுள்ளார்கள்.

இந்தியா, மெக்ஸிக்கோ, ஆர்ஜன்டீனா, சுவீடன், கிறீஸ் மற்றும் தன்சானியாவின் தலைவர்கள், புத்தாண்டை யொட்டி விடுத்துள்ள அறிக்கையொன்றிலேயே மேற்படி கோரிக்கை வலியுறுத்தப்பட்டுள்ளது.

மேலும் அணுஆயுதசோதனை குறித்த அமெரிக்காவின் கொள்கையை மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் அவர்கள் கேட்டுள்ளார்கள்.

மேற்படி ஆறுநாடுகளைச் சேர்ந்த தலைவர்களினதும் கூட்டறிக்கை அவற்றின் தலைநகர்களில் வெளியிடப்பட்டன. (எ)

## விண்வெளி ஆயுதப்போர்: பாதுகாப்பு திட்டத்திற்கு 50 கோடி டாலர் வழங்குக

வாஷிங்டன், டிச 30

விண்வெளி ஆயுதப்போர்பாதுகாப்புத்திட்டத்திற்கு கூடுதலாக ஐம்பதுகோடிடொலர்நிதி வழங்குமாறு அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் திரு. கெஸ்பர்வைன்பேகர் அமெரிக்க பாராளுமன்றத்தை கேட்டுள்ளார்.

இந்த திட்டத்தின் கீழ் புதிய ராக்கெட்டுக்கள் தேவைபடுகின்றன என்றும் அவர் கூறியுள்ளார். (எ)

## பிரிட்டன் முன்னாள் பிரதமர் மெக்மிலன் காலமானார்

லண்டன் டிச 30

பிரிட்டனின் முன்னாள் பிரதமர் திரு ஹெரல்ட் மெக்மிலன் தனது 92வது வயதில் நேற்று காலமானார்.

1957ம் ஆண்டு முதல் 1963ம் ஆண்டு வரை 'கன்சவேட்டிவ்' கட்சி அரசிற்கு அவர் தலைமை வகித்தார்.

சுவிடிஸ் கால்வாய் நெருக்கடியின் போது திரு. அன்ரனி ஏடனிடமிருந்து பிரதமர் பொறுப்பை திரு மெக்மிலன் ஏற்றுக்கொண்டார். (எ)

## பஞ்சாப் உடன் படிக்கை: 'எந்தநேரத்திலும்செயல்படுத்த அரசு தயாராகவுள்ளது'

புதுடில்லி, டிசம்பர் 30

"பஞ்சாப் உடன்பாட்டின் ஒவ்வொரு அம்சத்தையும் எந்த நேரத்திலும் செயல்படுத்த மத்திய அரசு தயாராகவுள்ளது"

இவ்வாறு அந்தமான் நிக்கோபா தீவுகளில் மூன்றுநாள் விஜயத்தின் இறுதியில் நேற்று மாலை போர்ட் பிளாரில் செய்தியாளர் கூட்டத்தில் பேசிய இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தி கூறினார்.

அவர்மேலும் பேசுகையில்இந்த வகையில் பஞ்சாப் அரசிற்கும் அகாலிகளுக்கும் தான் கஷ்டம் உள்ளது என்ற அவர், பஞ்சாப் ஒப்பந்தம் செயல்படுத்தப்படாமல் இருப்பதற்கும் தீவிரவாதத்திற்குமிடையே எவ்விதத் தொடர்புமில்லை என்றார்.

பத்திரிகையாளர் ஒருவரின், மும்மொழித்திட்டத்தை மத்திய அரசு ஆதரிக்குமா? என்ற கேள்வியொன்றுக்கு பதிலளித்துப்பேசிய இந்தியப் பிரதமர் மும்மொழித்திட்டத்தை மத்திய அரசு ஆதரிக்கும், இதிலிருந்து அரசு மாறவில்லை பண்டிட் ஜவஹர்லால் நேருவின் இந்த கொள்கையிலிருந்து அரசு என்றும் மாறாது' என்று வலியுறுத்தி கூறினார். (எ)

## மண், நீர்வள பாதுகாப்புக்கு மரம் நாட்டுதல் அவசியம்

பண்டத்தரிப்பு, செவ்.

"எமது முன்னோர்கள் ஆலங்களில் நிழல்தரும் மரங்களை நாட்டி அவற்றை சோலை வனங்களாக திகழவைத்தார்கள். மூவேந்தர்களும் பண்டைத் தமிழ்நாட்டில் மரம் நாட்டுதலில் ஈடுபட்டு தொண்டாற்றியதை வரலாறுகள் மூலம் அறியக்கூடியதாக உள்ளது. எனவே ஆலயங்களில் மரம் நாட்டும் பணிமிகவும் புனிதமானது"

இவ்வாறு பிரான்பற்றுமுருகமூர்த்தி ஆலயத்தில் அண்மையில் நடைபெற்ற மரம் நாட்டு விழாவில் தொழில்அதிபர் க. கனகராசா சிறப்புவிருந்தினராக கலந்து கொண்டு உரையாற்றுகையில் குறிப்பிட்டார்.

திரு ந. தங்கத்துரை தலைமையில் நடைபெற்ற இவ்விழாவில் பிரதம அதிதியாக கலந்து கொண்ட சண்டிலிப்பாய் உதவி அரசாங்க அதிபர் செல்வி சாந்தி சுப்பிரமணியம் உரையாற்றுகையில்; வரண்ட பிரதேசமான எமது யாழ். குடாநாட்டின் மண்வளத்தையும், நீர்வளத்தையும் பேணிப் பாதுகாக்க மரநடுகை மிகவும் அவசியம் என்றார்.

தொழில் அதிபர் திரு. கனகராசா பெருந்தொகையான மரக்கன்றுகளை பொதுமக்களுக்கு அன்பளிப்பாக வழங்கினார்.

பண்டத்தரிப்பு விவசாய விரிவாக்க அலுவலர் திரு. வை. பாலகிருஷ்ணன், பயிர்ச்செய்கை உத்தியோகத்தர்களான திரு சபா நாராயணன், திரு எஸ் நாகராசா. யாழ் விவசாய திணைக்கள நிர்வாக அதிகாரி திரு ஏகாம்பரம் ஆகியோர் உட்பட மற்றும்பலர் உரையாற்றினார்கள். (வா)

## தனியார் பேருந்து இயக்குநர் சங்க தீர்மானம்

வல்வெட்டித்துறை: செவ்.

வடமராட்சி தனியார் பேருந்து 751—763 இலக்க இயக்குநர் சங்க, 1987ம் ஆண்டுக்கான புதிய நிர்வாகசபைத் தெரிவு சங்க காரியாலயத்தில் நடைபெற்ற பொழுது வல்வை அரசினர் ஆஸ்பத்திரிக்கு செல்லும் நோயாளர்கள், ஊழியர்கள் நலன்கருதி, ஜனவரி முதலாந்திகதி முதல் அரை மணித்தியாலத்துக்கு ஒரு டஸ் திக்கம்-வதிரி ஊடாக பருத்தித்துறை. யாழ்ப்பாணம் சேவை நடாத்துவதெனவும், சங்க நிதியி வல்வை அரசினர் வைத்தியசாலைக்கு முன்பு வழங்கிய தொகைக்குக் கூடுதலாக அத்தியாவசிய ஊசி மருந்துகள் அன்பளிப்பு செய்வதாகவும் முடிவுசெய்யப்பட்டது. பின்வருவோர் புதிய நிர்வாகிகளாகத் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் அ பரமகுரு, உபதலைவர்; த கதிர்காமநாதன், செயலாளர்; பா. பாலராஜ்,

(7-ம் பக்கம் பார்க்க)

## உலகச் செய்திகள்

### பேச்சுக்கள் குறித்துக் கருத்தரங்கு

புதுடில்லி டிசம் 30

இந்தியப் பிரதமர் திரு. ராஜீவ்காந்திக்கும், சோவியத் தலைவர் திரு. கொர்பச்சேவ்வுக்குமிடையில் அண்மையில் இடம்பெற்ற பேச்சுக்கள் குறித்து ஆராயும் பொருட்டு நேற்று புதுடில்லியில் கருத்தரங்கு ஒன்று இடம்பெற்றது.

இந்த இருநாடுகளுக்கிடையேயான உறவுகளை வலுப்படுத்துவதில் டில்லி பிரகடனம், வரலாற்றுப் புகழ்மிக்கது என்று கருத்தரங்கில் பேச்சாளர்கள் வர்ணித்தார்கள்.

பொருளாதாரம், விஞ்ஞானம் மற்றும் தொழில் துறைகளில் இந்த தொடர்புகள் புது வழியை காட்டியுள்ளன என்று அகில இந்திய காங்கிரஸ் (இ) கமிட்டியின் வெளிவிவகாரப் பிரிவின் தலைவர் திரு. ரோமேஷ் பண்டாரி கூறினார். (எ)

### கிராம பெயர்மாற்றம்

யாழ்ப்பாணம், புதன்

கரணவாய் தெற்கில் இளங்கோ சனசமூக நிலையம் அமைந்துள்ள ஒல்கட்டி என்ற கிராமத்திற்கு அண்மையில் வடமராட்சி தெற்கு மேற்கு உதவி அரசாங்க அதிபர் திரு. க. ஐயாத்துரை அவர்கள் "செல்வாபுரம்" என்ற புதிய பெயரைத்திரை நீக்கம் செய்து வைத்தார்.

மேற்படி விழாவுக்கு வடமராட்சி சனசமூக நிலைய பிரதிநிதிகளும்கலந்துகொண்டனர்.

### விழிப்புக்குழு

யாழ்ப்பாணம், புதன்

அராலி கிழக்கு முதலாம் வட்டாரத்தில் அம்பாள் விழிப்புக்குழு ஒன்று தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆதரவுடன் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. (கி)

## வடபிராந்திய இ. போ. ச. வில் பஸ், லொறி சாரதி பயிற்சி பெற ரூபா 600 கட்டணம்

சுண்டுக்குளி, செவ்வாய்

வர்த்தக சம்பந்தமான வாகனங்களாகிய லொறி, பஸ் ஆகியவற்றை செலுத்துவதற்கு சாரதிப் பயிற்சி பெறுபவர்கள் இனிமேல் கோண்டாவிலிலுள்ள வடபிராந்திய போக்குவரத்துச்சபையுடன் தொடர்புகொண்டுஇதற்கான பயிற்சியை பெற்றுக்கொள்ள முடியுமென அறிவிக்கப்பட்டுள்ளது. மேற்படிவாகனங்களை செலுத்துவதற்கு பயிற்சிபெறுவர்கள் பயிற்சிக்கட்டணமாக முதல் 5 நாட்களுக்கு ரூபா 600 செலுத்தவேண்டும் ஐந்து நாள் பயிற்சி முடிவில் இவர்களுக்கு சாரதிப்பரிசோதனை நடத்தப்படும். இதில் தகுதி பெற்றோருக்குதகுதிச் சான்றிதழ்கள் வழங்கப்படும்.

தகுதியற்றோர் மீண்டும் தொடர்ந்து பயிற்சி பெறுவதற்கு நாளொன்றுக்கு ரூபா 175 வீதம்கட்டணம் செலுத்த வேண்டும்.

இவ்வாறு வடபிராந்திய போக்குவரத்துச் சபைத் தலைவர் யாழ் அரசாங்க அதிபருக்கு கடிதமூலம் அறிவித்துள்ளார்.

மேற்படி தகுதிச்சான்றிதழ்களைப் பெற்றபின்பே மோட்டார் வாகன அனுமதிப்பத்திரம் பெறுவதற்கு உதவி மோட்டார் போக்குவரத்து ஆணையாளருக்கு இவர்கள் விண்ணப்பம் செய்யவேண்டும் எனவும் கூறப்பட்டுள்ளது.


மானிப்பாயில் புதிய கல்வி நிறுவனம்

பிறயிற்றன்ஸ் அக்கடமி

(மருதடி பிள்ளையார் கோவிலுக்கு அண்மையில் தற்போது பாலர் பாடசாலை நடக்குமிடத்தில்)

★ மனையியல் டிப்ளோமா
(Home Science Diploma)
தையல், பூவேலை, மக்றமி, கேக், சிகை அலங்காரம். இன்னும் பல உள்ளடங்கிய வகுப்புக்கள் (2/6/9 மாத காலம்)
ஆரம்பம்:- 05-01-87 காலை.
விசேட விரிவுரையாளர்களும் வருகை தருவார்கள்.

★ English Shorthand and Typewriting
(1987-ம் ஆண்டு G C.E. (O/L) எண்டன் பிற்மன், டிப்ளோமா பரீட்சைகளுக்கு) வகுப்புக்கள்,
ஆரம்பம்:- 05-01-87 மாலை.

★ Computer Programming
(Basic Language)
6 months Course by Mr. Sundararajah
B Sc (Eng) Hons Lond M.C.S.
(கம்பியூட்டர் சபையினால் அங்கீகரிக்கப்பட்ட அங்கத்தவர்) வார இறுதி வகுப்புக்கள்
ஆரம்பம்:- 10-01-87 பிற்பகல்.
ஞாயிறு வகுப்புகள் காலையில நடைபெறும்.

★ தமிழ் சுருக்கெழுத்து தட்டெழுத்து
ஆரம்பம்:- வார நாட்கள் 05-01-87 பிற்பகல்.
வார இறுதி நாட்கள் 10-01-87 பிற்பகல்.

★ Book-keeping & Accounts
(for Pitman and other London Exams Helpful for those working in the Accounts field)
6 மாத கால வார இறுதி வகுப்புக்கள்.
ஆரம்பம்:- 10-01-87 மாலை.

மேலதிக விபரங்களுக்கும், விண்ணப்பப்படிவங்களுக்கும் 02-01-87 முதல் தொடர்புகொள்ளலாம்.

Brightons Academy,
CAMERAN WALAVU.
Manipay.


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

**மணிவாக்கு**

எந்தக்காலத்திலும் எவரும் கடவுளைக் கண்டதில்லை. நாம் ஒருவரை ஒருவர் நேசித்தால் நம்முள் கடவுள் வசிக்கிறார்.

— பைபிள்

# நமது நோக்கு

## சோதனையும் சோதிடமும்

வாழ்க்கையில் இன்னல் ஏற்படாதிருக்கும் போது நாம் திருப்தியுடனும் அமைதியுடனும் இருப்பதாகப் பலர் பகர்கின்றனர். தோல்வியும் இழ்ச்சியும் வரும்போது அவர்களின் இயல்பு மாறி வருகிறது.

இன்னலைக்கொண்டு மனிதன் சோதிக்கப்படுகிறான். குழப்பம் நிறைந்த போராட்டமே தனிமனித வாழ்விலும் நாட்டின் வாழ்விலும், உலகளாவியநிலையில் நாம் காணும் துன்பக் காட்சி.

இவ்விடயத்தை பீடிகையாகக்கொண்டு பாப்பரசர் நிகழ்த்திய நத்தார் பிரார்த்தனை எங்கும் எவர் நெஞ்சையும் உருக்கவல்லது.

இன,மத, மொழி பேதங்களை கடந்த உயர்நிலையில் நின்று நிகழ்த்திய இந்தப் பேருரை எவரின் நெஞ்சையும் அள்ளும்.

''பகைமையும் வெறுப்பும் பயங்கரச்செயல்களும் உலகின் பல பாகங்களில் மிகச் சாதாரணமாய்விட்டது.

கிறிஸ்தவ உலகம் கடைப்பிடிக்கும் ஏழைமையையும் பொறுமையையும் இவை முறியடிக்க இயலாதென்ற நம்பிக்கையே எமது அரண். கடவுளின் கருணை பலவீனப்பட்ட மக்கள் சார்பில் என்பதை நாம் ஒருபோதும் மறக்கலாகாது.''

பாப்பரசரின் சிந்தனையையே எல்லா மதங்களும் வற்புறுத்துகின்றன.

பரம ஏழையாக அவதரித்த இயேசுபிரான் போன்று அவருக்கு முன்னும் பின்னும் தோன்றிய மகாத்மாக்கள் ஏழைகள் விடிவுக்காக வாழ்ந்த வரலாறு இன்று உலகின் பொக்கிஷம்.

போருக்கும் அழிவுக்கும் மத்தியில் ஒரு புண்பட்ட உலகம் உயிர்தப்பியிருப்பது இக்காலத்து அற்புதம்.

இதற்கு மாறான காட்சியே நாம் தினசரி வாழ்வில் இன்று காணும் அனுபவம். யாழ்ப்பாணமே இதற்கு நல்ல உதாரணம். போர்நிறுத்தம், நட்புறவு பற்றிய பேச்சு ஒரு பக்கம்; கோட்டையின் 'ஷெல்'லும் படையினர் பவனியும் மறுபக்கம்.

கள்ளுண்டார் கொண்ட மயக்கம்போல் உணர்ச்சியிழந்த நிலையில் நாடு எங்கு செல்கிறதென்பதை அறியாத ஆட்சிகள் இன்று பலவாய்ப் பெருகிவருகின்றன.

சாந்தசொரூபி கிறிஸ்து பெருமானின் பிறப்பிடமாகிய பெத்லேகத்தின் பெருங்கோயிலில் நள்ளிரவு நத்தார் ஆராதனை நடக்கும்போதே, அங்குள்ள வீடுகள் ஒவ்வொன்றாக இஸ்ரேலிய துருப்புக்கள் சோதனை நடத்தின, தேடுதல் அழித்தல் என்ற முனாரி ராகம் எங்கள் மக்களுக்கும் பழம் பாடமாய் விட்டது.

மத்திய கிழக்கின் போர் நத்தார் தினத்தில் பேருட்டிலும் கென் லெபனனிலும் பலஸ்தீனியர் அகதி முகாம்களை தாக்குவதில் உக்கிர மடைந்திருக்கிறது.

ஆறுவருடம் முடிவடைந்த ஈரான்-ஈராக் போரும் நத்தார் தினத்தில் வீறுகொண்டிருந்ததும் குறிப்பிடத்தக்கது.

தென் ஆபிரிக்காவில் கறுப்பரைக் கொல்லும் பயிற்சி நத்தாரன்றும் தொடர்ந்து நடந்தது. அங்குஒருவ உயிரோடெரிக்கப்பட்டது; அன்றைய விசேட சாதனை; இலங்கை வாழ்தமிழ் மக்களுக்கு இது அதிர்ச்சியளிக்காது.

கிறித்துநாதர் ஆசியாவில் அவதரித்தபோதும் கிறித்துமதம் ஐரோப்பிய அமெரிக்க நாடுகளில் பெரிதும் பரவியிருக்கிறது. பௌத்தம் இந்துமதம் இஸ்லாம் பரவியிருக்கும் ஆசியாவில் பிலிப்பைன்ஸ் ஒரே ஒரு கத்தோலிக்க நாடு. இங்கு வாழும் சுமார் ஐந்தரைக் கோடிமக்கள், 20 வருடம் ஜனாதிபதியாகவிருந்த மார்க்கோஸை நாடுகடத்திய பின் நடத்தியமுதற்கொண்டாட்டம். இது அந்த நாட்டுக்கு அவசியம் வேண்டிய அமைதியைக்கொண்டு வருமா?

சமயவாழ்வில் நம்பிக்கை யற்றரஷ்யாவிலும், சீனாவிலும் அரசியல் பொருளாதார மாற்றங்கள் ஏற்படும் அறிகுறிகள் உண்டு. சமுதாயவாழ்வில் மனிதாபிமானம்மிளிர்வதற்கு சமயம் இன்றியமையாததா?

இந்த வினா ஒருபுறமிருக்க சோஷலிச நாடுகளுக்கு ஜனநாயகம் புறம்பல்ல என்ற கருத்து சீன மாணவ உலகைக் கவர்ந்திருக்கிறது.

அமெரிக்க தலைமையில் உலகை ஆட்டி வைக்க முயலும் மேனாட்டு முதலாளித்துவம், போர் ஆயுதவியாபாரத்தில் மூழ்கியிருப்பதும் இன்று முடிவடையும் ஆண்டின் சாபக்கேடு.

இவ்வாறு நாம் அடுக்கிக் கொண்டு போவது வருடமுடிவின் வழக்கமாகிறது. விடிந்ததும் புத்தாண்டின் பிறப்பைக் கொண்டாடுவதில் அர்த்தம் உண்டா?


சோதிடம் நல்லவென்று சொல்லுவதாகப் பத்திரிகைகள் ஆர்ப்பரிக்கின்றன. நாகரிக மனிதனை இன்று சோதிடம் கவர்ந்திருக்குமளவில் வேறெந்த சாதனமும் வன்மை பெற்றிருக்கவில்லை.

ஆட்சிமாற்றம் மட்டுமல்ல தலைவர்கள் சங்காரம் பற்றியும் சோதிடம் அச்சுறுத்த துணிந்திருக்கிறது.

வாழ்க்கையில் தோல்விகள் வரத்தான் செய்யும்; வாழ்வில் ஒளிவீச வேண்டுமென்று துணிகொண்டால் நாளென்செயும் வினைதான் என்செயும் எமை நாடிவரும் கோளென் செயும்?

# பகைமையையும் வெறுப்பையும் கற்பிக்கும் பாடப்புத்தகங்கள் எரிக்கப்பட வேண்டும்!

— நடேசன்



நடேசனின் நீண்டவாழ்வு இன்றைய சந்ததிக்கும், இனி வரும் சந்ததிகளுக்கும் ஒரு இலட்சிய வாழ்வு.

மனிதவர்க்கம் பிளவுபடாது வாழவேண்டுமென்று கொண்ட பரமனிதன் நடேசன; தேகாரோக்கியத்தை தமது பிற்கால வாழ்வில் எங்கும் நிலைவுறுத்தினார். தாவரஉணவு தமது பரிசோதனையில் உத்தமமான உணவென்பதை நண்பர்களுக்கும், பொதுமக்களுக்கும் எவ்வித இன, மத, மொழி பேதமின்றி அந்நியோன்யமான முறையில் விளக்குவதில் சலிப்படையாதவர்.

சில வருடங்களுக்கு முன் தமது பழைய கல்லூரியாகிய யாழ். இந்துக் கல்லூரியின் பரிசளிப்பு விழாவின் பிரதம அதிதியாகப் பேச எழுந்ததும், ''நான் இங்கு படிக்கும்போது ஒரு பரிசையும் பெற்ற நினைவில்லை. எனது தகப்பனார் இங்கு கணக்காளராயிருந்து கண்ட அனுபவம் அவருக்குக் கசப்பாயிருந்தது; எனவே என்னைத் தேற்றுதற்குத் தம் செலவில் எனக்கு பரிசுகளைத் தனிப்பட்டமுறையில் வழங்கி வந்தார். இன்று இங்கு பரிசு வழங்க வந்த அம்மையார் ஒரு கல்லூரி அதிபரென்பதால் அவர் கல்வி பற்றிப் பேசும் தகைமையுடையவர். பரிசு பெறாதநான் இன்று பரிசு வழங்கும் பெருமைக்குரித்தாக இந்த கடமையை மாற்றமுடியுமா'' என்று கேட்க சபையோர் கொல்லெனச் சிரித்தனர். பரிசளிப்புப்பேருரை அந்தக் குறிப்பிலேயே தொடங்கியதைச் சபையோர் கிரகித்தனர்.

எடுத்த எடுப்பிலே எந்தவிடயத்தையும் தெளிவாக, மிக ஆழமாக, நகைச்சுவை கலந்த சாதாரண சொற்களால் எழுதும் திறமை மறைந்தும் மறையாத நடேசன் கியூஸியின் தனிப்பட்ட பண்பு.

இன்று நாட்டில் நாம் காணும் தீமைகள் அனைத்துக்கும், கல்வித் திணைக்களம் தயாரிக்கும் சரித்திர பாடப் புத்தகங்களே காரணம். எனவே அன்று பிரெஞ்சு அறிஞர் அனட்டோல் பிராஸ்ஸ் சொன்னதுபோல ''பகைமையை விருத்திசெய்யும் புத்தகங்கள் அனைத்தையும் தீயிடுங்கள்'' என்று நானும் சொல்லவேண்டியிருக்கிறது என்றார் நடேசன். பலர் வாழ்வைப் பண்படுத்திய பெருவள்ளல் இவர். இவரைப் போன்ற உத்தமர்களைக் காண்பது அரிது.

இவ்வித பாடப்புத்தகங்களை அரைகுறையாகப் படித்துவிட்டு இராணுவத்தில் சேர்ந்து இங்கு வரும் இளம் பையன்கள் வடக்கு ஒரு எதிரியின் நாடு - இங்கு வாழ்பவர் அனைவரும் எமது சத்துராதிகள் என்றதை மட்டும் படித்துவிட்டு துவக்கை ஏந்திவருபவர்கள். சுடும் திறமையில்லாவிட்டாலும் சுடப்படுபவர்கள் எவராலும் எமது பகைவர்களேஎன்ற தப்பான எண்ணம் இந்தப் பச்சிளம் பையன்களுக்குண்டு. இந்தநிலை மாறினால்தான் நாட்டில் அமைதி உண்டாகும்'' என்றார் நடேசன் ஒரு அமெரிக்க பேரறிஞர் குறிப்பிட்டது போல் 'இவ்வித ஆக்கங்களைப் பற்றி எழுதுபவரும், பேசுபவரும் அவற்றைத் தானே செயலில் சாதிப்பவராயிருந்தால் அவர் என்றும் இறப்பதில்லை'' என்றார் இதுமறைந்த நடேசனுக்குப்பொருத்தமாகும்.

அண்மையில் அவருடைய ஆத்ம நண்பர் அமரர் ஹன்டி பேரின்பநாயகம் நினைவு மலரை வெளியிட்டு வைத்த அமரர் நடேசன் அழைப்பு வந்தபோது தனக்கெதிரான உயர் நீதிமன்ற வழக்கின் தீர்ப்பு தமக்கு சிறையளிக்காவிட்டால் கட்டாயம் வருவதாகச் சொன்னார். அதிலும் சிரிப்பு உலகப் மிக ஆவலுடன் அவதானித்த வழக்கு அது உலகெங்கிலும் மக்களில் சிவில் உரிமை மறுக்கப்பட்டதென்பதற்கு வாதாடிய வீரன் நடேசனுக்கு எதிராக தமது நாட்டிலே அது பற்றிய வழக்கு என்னும் என்ற விசனத்துடன் பிரிட்டிஷ் சிவில் உரிமை இயக்கப் பிரமுகர் நேரிலே பிரசன்னமாகவிருந்து பார்த்தார்.

வழக்கு தள்ளுபட்டதும் யாழ்ப்பாணம் வந்த நடேசனை ஒரு வீரராக மதித்த மக்கள் அவருடைய பேச்சைக் கேட்டு குதூகலித்தனர். அவர் அமரர் ஹன்டி பேரின்பநாயகம் பற்றி உரைத்த புகழ் அனைத்தும் இன்று அவருக்கே உரித்தாகிறது அந்த நூலை ஒவ்வொரு அத்தியாயமாக விளக்கி நடேசன் இந்த நூல் இரண்டு

வி. சிவசுப்பிரமணியம்

வருடங்களுக்கு முன் வெளியிட்டிருந்தால் அரசு என்னில் ஒரு தவறான வழக்கை வைத்து நேரத்தையும் பணத்தையும் விரயம் செய்திருக்காது என்று சொல்லி சபையைகுதூகலிக்க வைத்தார். நாட்டின் தவப்பயனாகவே இத்தகைய மனிதர் அவதரிக்கின்றனர்.

## அமெரிக்க சிறுவர் உதவிக்கரம்

சுழிபுரம், திங்கள்

சுழிபுரம் காட்டுப்புலம் குடாக்கனை ஆகிய பகுதிகளில் தொழு நோயால் பாதிக்கப்பட்ட சிறுவர்கள் முன்னேற்றத்திற்காக வேண்டிய உதவிகளை செய்யவும், இவர்களது சமய வாழ்வு மேன்மையுறவும் அமெரிக்க நாட்டு சிறுவர்கள் சிவாய ஸ்ரீ சுப்பிரமுனிய சுவாமியின் பிரதிநிதிமூலமாக உதவமுன்வந்துள்ளனர். சுவாமியின் அழைப்பின் பேரில் அண்மையில் அமெரிக்கா சென்று வந்த டாக்டர் எஸ். சண்முகசுந்தரம் இத்தகவலை சுழிபுரம் சுகாதார அபிவிருத்திக் கழகத்தினருக்கு தெரிவித்துள்ளார். தொழு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு மருந்து உணவு போன்றவற்றை பெற்றுக் கொடுப்பதிலும் சுகாதார அறிவை ஊட்டுவதிலும் சுகாதார அபிவிருத்திக் கழகத்தினர் பெரும் தொண்டாற்றி வருகின்றனர்.

## இருபாலையில் வீதிசீர்கேட்டால் பொதுமக்கள் பாதிப்பு

உரும்பிராய், செவ்

யாழ். பருத்தித்துறை வீதியில் இருபாலைச் சந்தியிலிருந்து காங்கேசன்துறை உப்புமடச் சந்திவரையுமுள்ள நான்கு மைல் தூரம் அமைந்துள்ள இருபாலைவீதி நீண்டகாலமாக குண்டும் குழியுமாகவுள்ளதால் மக்கள் மிகவும் அவதிக்குள்ளாகின்றனர்.

குடிசன நெருக்கமுள்ள இவ் வீதியில் கோண்டாவில் அரசினர் பிரசவவிடுதி ஒன்றும் அமைந்துள்ளது.

இப்பிரசவ விடுதிக்கு வரும் கர்ப்பிணி தாய்மார்கள் பல கஷ்டங்களுக்கு ஆளாகவேண்டியுள்ளது அண்மையில் இப்பிரசவ விடுதிக்கு வந்த கர்ப்பிணித்தாய் ஒருவர் வந்த வாகனத்திலேயே குழந்தை ஒன்றைப் பிரசவித்ததாகவும் கூறப்படுகிறது

இவ்வீதியின் சீர்கேடுகுறித்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளின் கவனத்துக்கு கொண்டுவரப்பட்டபோதும் இன்றுவரை இவ்வீதி திருத்தப்படவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## இரண்டுசக்கர உழவு யந்திரம் அன்பளிப்பு

வவனியா, செவ்.

செட்டிகுளம் பிரதேசசபைக்கு இரண்டு சக்கர உழவு இயந்திரம் ஒன்று அண்மையில் அன்பளிப்புச் செய்யப்பட்டது.

60 ஆயிரம் ரூபா பெறுதியான இந்த உழவு இயந்திரத்தினை வவனிய அரச அதிபர் திரு கே. வி லோகேஸ்வரன், பிரதேச சபைத்தலைவர் திரு க. ஆதவிராஜாவிடம் கையளித்தார்.

கச்சேரி வளவினுள் வைத்து குறித்த உழவு இயந்திரம் வழங்கப்பட்டது.

இவ்வுழவு இயந்திரம் சூடுவெந்த புலவு கிராமோதய சபையின் பொறுப்பில் பாவற்குளம் விவசாயிகளின் தேவைக்கு பயன்படுத்தப்படும்

## தமிழீழகிராமிய நீதிமன்றம்

உடுவில், செவ்.

உடுவில் கிராம சேவையாளர் பிரிவுக்குட்பட்ட மக்களின் பிரச்னைகளை ஆராய்ந்து விசாரணைசெய்து தீர்ப்புவழங்குவதற்காக கிராமிய நீதிமன்றம் ஒன்று அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதன் செயலாளராக செ. செல்வராசாவும், இணைச்செயலாளராக எஸ் எஸ் நவரத்தினமும் உறுப்பினர்களாக சி எஸ் கனகசிங்கம், ஆர். பிரான்சிஸ் எஸ் நவரத்தினம் பீட்டர் சி குநசலசிங்கம், எஸ் பூதத்தம்பி ஆகியோரும் நியமிக்கப்பட்டுள்ளனர்.

பிரதி ஞாயிறு தோறும் இக் கிராமிய நீதிமன்றம் உடுவில் அமிதக பாடசாலையில் கூடி வழக்குகளை விசாரணை செய்து வருகின்றது.

## தினமும் 500 பேருக்கு சிகிச்சை

வவனியா, செவ்.

வவனியாவில் மூளைக் காய்ச்சலும், மலேரியாவும் மிகவேகமாகப் பரவிவருகின்றது.

வவனியா அரசினர் ஆஸ்பத்திரிக்குத் தினமும் சுமார் 500 பேர் இந்நோய்களுக்குச் சிகிச்சை பெற வருகின்றனர் என ஆஸ்பத்திரி வட்டாரங்கள் தெரிவித்தன

இவர்களில் இருபது வீதமானோர் மூளைக் காய்ச்சலினாலும், 80 வீதத்தினர் மலேரியாவினாலும் பாதிக்கப்பட்டுள்ளதாக ஆஸ்பத்திரி ஆய்வுகூட இரத்தப் பரிசோதனை அறிக்கையிலிருந்து தெரியவருகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

### விடுதலைப் புலிகளின் முயற்சியினால்

# தமிழ் எழுத்தாளர்கள் நமது கலையை மதித்து எழுதத்தொடங்கியுள்ளனர்

## 'சசி பாரதி கதை' விமர்சன அரங்கில் கருத்து

கிளிநொச்சி செவ்

"தமிழ் எழுத்தாளர்கள் கடந்த காலங்களில் தமிழரின் போராட்ட உணர்வுகளுக்கு மதிப்பளியாது இருந்து வந்தனர் இந்நிலை விடுதலை புலிகளின் பெருமுயற்சியால் மிக அண்மைக்காலமாக யாழ். கிளிநொச்சி எழுத்தாளர்கள் தமிழரின் கலை கலாசாரம், பாரம்பரியம் முதலான வற்றை மதித்து எழுதும் நிலைக்கு வந்துள்ளனர்.'

கிளிநொச்சி எட்டாம் வாய்க்கால் பத்தினி பாடசாலையில் நடைபெற்ற சசி பாரதி கதைகள்' விமர்சன அரங்கில் பிரதம பேச்சாளராக கலந்து கொண்டு உரையாற்றிய கிளிநொச்சிப்பகுதி விடுதலைப்புலிகள் அமைப்பாளர் திரு. மூர்த்தி இவ்வாறு கூறினர்.

கிளிநொச்சி கலை இலக்கியப் பத்திரிகை நண்பர்கள் ஏற்பாட்டில் நடைபெற்ற இவ் வைபவத்திற்கு உருத்திரபுரம் மகா வித்தியாலய அதிபர் கா. நாகலிங்கம் தலைமை வகித்தார்.

விடுதலைப்புலிகளின் போராளியான செல்வி. உமா பேசுகையில் "சசி பாரதியின் கதைகளில் மிகவும் பிடித்தமான கதை 'பார்வை' யாகும்.'' இக்கதை மக்களுக்கு படிப்பினை தரவல்லது. விமர்சனங்களின்போது தரமற்ற முறையில் விமர்சிக்கப்படும்போது எழுத்தாளர்கள் சோர்வடையக்கூடாது இவ்வாறான விமர்சனங்கள் எழுத்தாளர் உயர்விற்கு வழி கோலும். சசிபாரதி கதைகள் பொதுவாக வரவேற்க கூடியதாக அமைந்துள்ளது'' என்று தெரிவித்தார்.

எழுத்தாளர் மு விவேகானந்தன், அறிமுக உரையையும், திரு கு ராசா விமர்சன உரையையும் குருகுல அதிபர் வே கதிர்வேலு சிறப்புரையையும், ஆசிரியர் செய்வேந்திரன் வரவேற்புரையும், டாக்டர் மே. வி. சே திருலோகமூர்த்தி நன்றியுரையையும் நிகழ்த்தினர்கள் சசிபாரதி எஸ் சபாரத்தினம் பதிலுரையாற்றினர்.

---


சங்கானை
பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
(வ. உ)

### வெற்றுச் சாக்கு கேள்வி விண்ணப்பம்

சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத்தில் தரம் பிரிக்கப்பட்ட 3000 வெற்றுச் சாக்குகள் கேள்விப் பத்திர மூலம் விற்பனைக்குண்டு வைப்புப் பணமாக ரூபா 250/-ஐ சங்கத்தில் செலுத்தி விண்ணப்பப் படிவத்தை சங்கத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

விண்ணப்பப் படிவம் மூலமும் இ—து பக்க மூலையில் வெற்றுச் சாக்கு கேள்வி என எழுதப்பட்டு பொது முகாமையாளர், சங்கானை பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், சங்கானை என்ற முகவரிக்கு அனுப்பப்படல் வேண்டும்.

விண்ணப்ப முடிவுத் திகதி- 5-1-1987.

பொது முகாமையாளர்,
சங்கானை ப. நோ கூ.
A 3419 சங்கம்.


---


### ஓராண்டு நினைவு அஞ்சலி



## திருமதி இராஜலட்சுமி முத்துக்குமாரு

(ஆசிரியை யாழ்/கட்டைவேலி யார்க்கரு விநாயகர் வித்தியாசாலை)

தோற்றம் : 26-11-1951
மறைவு : 21-12-1985

எம்மையெல்லாம் திடீரென ஆறாத் துயரில் ஆழ்த்திவிட்டு இறைவனுடன் சங்கமித்த எம் அன்பு மகளே நீ கட்டிய கோட்டையெல்லாம் மனவாய்க் கலைந்தாலும் என்றும் எம் நெஞ்சில் உன் நினைவுகள் மறாது. உன் ஆத்மா சாந்தியடையவேண்டிப்பிரார்த்திக்கின்றோம்.

அன்புள்ள பெற்றோர், பிள்ளைகள், பிரபாகரன், பிரதீபா, சகோதரர், பெருமக்கள், நண்பர்கள்.

சாமியன் அரசடி,
கரவெட்டி மேற்கு.

C 6613


---


### 31-ம் நாள் நினைவஞ்சலி



திருமதி
தங்கமலர்
வைத்திலிங்கம்
தோற்றம்: 9-11-1927
மறைவு: 1-12-1986
அந்தியேட்டி: 3 -12-1986

எங்கள் இல்லத்தரசி எம்மைத் தவிக்கவிட்டு மறைந்து விட்டார். ஆனால் அவர் ஏற்றி வைத்த குடும்ப விளக்கு எங்கள் உள்ளங்களில் என்றும் ஒளிவீசிக் கொண்டே இருக்கும். அவர் எங்கள் இல்லத்தரசி மட்டுமல்லர். எங்கள் குல தெய்வமுமாவார். அன்னாரின் ஆன்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

எங்கள் அன்புத் தெய்வம் நோயிற்றிருந்தபோது சிகிச்சையளித்த யாழ் அரசினர் வைத்தியசாலை வைத்தியர்களுக்கும் அன்புடன் பராமரித்த வைத்தியசாலை ஊழியர்களுக்கும், பல வகையிலும் உதவிசெய்த உற்றார், உறவினர், நண்பர்களுக்கும், காங்கேசன்துறை சீமெந்துக் கூட்டுத்தாபன உத்தியோகத்தர், ஊழியர்களுக்கும், இறுதிக்கிரியையிற் கலந்து கொண்ட அன்பர்களுக்கும் எங்கள் உளங்கனிந்த நன்றி.

செ. வைத்திலிங்கம்
குடும்பத்தினர்.
'குமாரபவனம்',
உடையார் ஒழுங்கை,
கொக்குவில் கிழக்கு,
கொக்குவில்.

(C 6610)


---

### சுகாதாரவிழா

ஊர்காவற்றுறை, செவ்

தீவுப்பகுதியிலுள்ள ஆரம்ப சுகாதார நிலையங்கள் கூட்டாக சுகாதார விழாவை வேலணை மகா வைத்திலிங்கம் துரைச்சாமி மத்திய மகாவித்தியாலயத்தில் நடாத்தினார்கள். இவ்விழாவுக்கு டாக்டர் சி விஸ்வேஸ்வர ஐயர் தலைமை வகித்தார்.

விழாவில் சுகாதாரம் சம்பந்தமாக ஆய்வுரைகளும், வில்லுப்பாட்டு நாடகம், நாட்டுக்கூத்து போன்ற கலைநிகழ்ச்சிகளும் இடம் பெற்றன.

ஊர்காவற்றுறை மெலிச்சிமூனை தம்பாட்டி, புங்குடுதீவு அல்லைப்பிட்டி, மண்டைதீவு சரவணை ஆரம்பசுகாதார நிலையங்கள் பல்வேறுபட்ட நிகழ்ச்சிகளில் பங்கு கொண்டன.

---

### அடைவுவைத்தோர்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பெற்று வருகின்றது அதனைத் தொடர்ந்தும் காலையில் வங்கி ஊழியர்கள் வங்கிக்கு வந்து திரும்புகின்றனர்.

மக்கள் வங்கி செயல் படாமல் இருப்பதன் காரணமாக குறித்த வர்த்தக காசோலைகளைக் கொண்டு பணம் பெறுவதற்காகப் பொதுமக்கள் மிகுந்த சிரமம் அடைகின்றனர்.

(சாவ நிரு-ஊ)

---

### இரு வருடங்களுக்கு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

நிலையத்திற்கு மாலை 6மணிக்கு வந்துசேருமென எதிர்பார்க்கப்படுகிறது.

பொதுமக்களின் நன்மை கருதி வ போ சபையினர், யாழ். அரசாங்க அதிபர் திரு எம். பஞ்சலிங்கம், திருமலை இணைப்பதிகாரி, திருமலை அரசாங்க அதிபர் ஆகியோருடன் தொடர்புகொண்டு அவர்களின் ஒத்தாசையுடன் இச்சேவையை ஆரம்பித்துள்ளனர். [இ]

---


இப்பொழுது
காண்பிக்கப்படுகிறது
லிடோ திரையில்
10-30, 2-30, 6-30
சுரேஷ் ரேவதி
கவுண்டமணி மனோரமா
நடித்த
ஆகாயத்
தாமரைகள்
[புதிய வெளியீடு கலர்]
Suitable For Adults

புதிய வெளியீடு
வெலிங்டன் திரையில்
10-30 2-30 4.30, 6-30
WILLIAM KATT
SEAN YOUNG
IN BABY
[Action Colour]


---

### பேராதனை பல்கலைக்கழகம் 5 இல் ஆரம்பமாகாது

கொழும்பு. செவ்வாய்

பேராதனைப் பல்கலைக்கழகம் முன்னர் அறிவித்தது போல் ஜனவரி மாதம் 5-ம் திகதி மீண்டும் திறக்கப்படமாட்டாது என அறிவிக்கப்பட்டுள்ளது.

அதனையடுத்து ஜனவரி முதல் வாரத்தில் நடைபெறவிருந்த சகல பரீட்சைகளும் காலவரையறையின்றி பின் போடப்பட்டுள்ளன.

பல்கலைக்கழகம் மீண்டும் திறப்பது பற்றிய அறிவித்தல் பின்னர் அறிவிக்கப்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. (சி)

---

### சாஸ்திரி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பேகடுவ இணக்கம் தெரிவித்துள்ளார்.

வன்னி சமாதானக்குழு உபதலைவர்களில் ஒருவரான எஸ், பத்மநாதன் நேற்றுக் காலை பிரிகேடியர் கொப்பேகடுவவை அவரது அலுவலகத்தில் சந்தித்து கைது செய்யப்பட்ட ஐவரும் அப்பாவிகளான குடும்பஸ்தர்கள் என்றும் அவர்களை உடனே விடுதலை செய்யுமாறும் கேட்டுக்கொண்டதுடன் மேலும் சமூகசேவை நோக்குடனே அவர்கள் இணக்கசபை உறுப்பினராக கடமை புரிவதாகவும் தெரிவித்தார்.

சம்பந்தப்பட்ட ஐவரையும் விடுதலை செய்வதற்கு ஆவன செய்வதாக பிரிகேடியர் திரு பத்மநாதனிடம் தெரிவித்தார்.

இதுஇவ்வாறிருக்க கொந்தக்காரன் குளம் குஞ்சுக்குளம் கடந்த திங்கட்கிழமை சுற்றிவளைத்த கறுப்புச் சட்டையினர் அப்பகுதி இணக்கசபை உறுப்பினர் இருவரை அவர்களது வீட்டில்வைத்து கைது செய்து ஓமந்தை முகாமிற்கு கொண்டு சென்றார்கள்.

குடும்பஸ்தர்களான திரு. ரி திருஞானசம்பந்தர் [வயது 42, திரு. வி. கிருஷ்ணபிள்ளை [வயது 35] ஆகியோரே இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களாவார். (ஓ)

---

### தமிழகத்தில்

(1ம் பக்கத் தொடர்ச்சி)

விரோதிகளுக்கு இப்பொருட்களை விற்கக்கூடாதென இந்தக் கடைகளுக்கு உத்தரவிடப்பட்டுள்ளதாகவும் மேற்படி பாதுகாப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டு வரும் அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.

புகையிரத நிலையங்கள், பஸ் நிலையங்கள், அதிகளவில் மக்கள் கூடும் இடங்களில் பொலிஸ் பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளதுமேலும்வீதிகளில் பொலிஸ் ரோந்து பலப்படுத்தப்பட்டுள்ளதுடன் பஸ் ரயில் பயணிகளின் பிரயாணப் பொதிகளும் சோதனை செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது. ரயில் பாதைகளை கண்காணிக்கவும் பாதுகாப்பு நடவடிக்கைகளும் அதிகரிக்கப்பட்டுள்ளது

மதுரையில் நேற்று இடம்பெற்ற வன்முறைச் சம்பவமொன்றில் தமிழ்நாடு அரசுக்குச் சொந்தமான ஜீப் ஒன்றும், லொறி ஒன்றும தீயிடப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகிறது. தொடர்ந்து இடம்பெற்றுவரும் இவ் வன்முறைகளில் இதுவரை எட்டு பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த சில வாரங்களுக்கு முன் தி மு க சட்டசபை உறுப்பினர்கள் 10பேர் பதவி நீக்கப்பட்டதும் தி மு க தலைவர் திரு மு. கருணாநிதி கைதுசெய்யப்பட்டுத் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டதையும் எதிர்த்தே இவ் வன்முறைச் சம்பவங்கள் தமிழ் நாட்டின் பல பகுதிகளிலும் தொடர்ந்துப் நடைபெறுவதாக. (சி

---

### தீவுப்பகுதியில் மூலிகைகளை வளர்க்க முயற்சி

வேலணை, புதன்

தீவுப்பகுதியில் உள்ள ஆயுர்வேத வைத்தியர் சங்கத்தினர் ஆயுர்வேத வைத்தியத்திற்கு தேவையான மூலிகைகளை வளர்ப்பதற்கு முன்வந்துள்ளனர்

இவ்வாறு மூலிகைகளை வளர்ப்பதற்கு தகுந்த இடத்தைத் தெரிவுசெய்து தேவையான மூலிகைகளை வளர்த்துக் கொண்டால் உள்ளூர் வைத்தியத்திற்குத் தேவையான மூலிகைகளைப் பெற்றுக்கொள்ளலாமெனவும் இவ்வைத்தியர் சங்கத்தின் தலைவர் தெரிவித்துள்ளார்.

---

### இன்று மாநாடு

யாழ்ப்பாணம், புதன்

வடபிராந்திய மினிபஸ் சேவைச்சங்கத்தினர் நடத்தும் பத்திரிகையாளர் மகாநாடு இன்று பிற்பகல் கொக்குவிலில் உள்ள தலைமைச் செயலகத்தில் நடைபெறவுள்ளது

இக்கூட்டத்தில் மினிபஸ் சேவைச்சங்கத்தின் புதுவருடத் திட்டங்கள் நடைமுறைகள் பொதுமக்கள் ஒத்துழைப்பு கட்டணவீதம் குறைத்தல் சாரதிகள், நடத்துனர்கள் பிரயாணிகளுடன் நடந்து கொள்ளும் முறை போக்குவரத்து விதிகள் பற்றிக் கலந்துரையாடப்படவுள்ளது

விழிப்புலனற்றோருக்கு இலவச பயணச்சீட்டு அடையாள அட்டையும் இன்று வழங்கப்படும். (வ)

---

### பொலிஸார் மக்களின் எதிரிகளல்ல

வவனியா நிருபர்

பொலிசார் பொதுமக்களின் எதிரிகல்ல; எல்லோரும் சமாதானமாக வாழவேண்டுமென்பதே பொலிசாரின் விருப்பமாகும் என்று வவனியா பொலிஸ் அத்தியட்சகர் றெஜி அமரசேகரா தெரிவித்தார்

நேற்று வவனியா கச்சேரியில் நடைபெற்ற நத்தார் விழாவில் கலந்துகொண்டு பேசுகையிலே அவர் இவ்வாறு கூறினர். (ஓ)

---

### எந்தவொரு

(1ம் பக்கத் தொடர்ச்சி)

அல்லது அரச அதிகாரிகளுக்கோ தொடர்பில்லை எனவும் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் இனப்பிரச்சினை ஓர் உள்நாட்டு விவகாரமெனவும், இலங்கை அரசும் மக்களும் இதனைத் தீர்ப்பர் எனத் தமது அரசு திடமாக நம்புவதாகவும் திருமதி ட்ரையாஸ் மேலும் தெரிவித்துள்ளார். [ஊ]

---

### வல்வெட்டித்துறையில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னேறிவந்தனர்.

இந்த இராணுவ பவனியை மேலும் தொடரவிடாமல் தமிழீழ விடுதலைப் புலிகள் 'கனன் சார்ஜ்' தாக்குதலை மேற்கொண்டனர்.

தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இராணுவத்திற்கும் பலத்த மோதல் இடம்பெற்றதில் இராணுவம் பலத்த இழப்புகளுடன் முகாம் திரும்பியது புலிகள் தரப்பில் மூவர் காயமடைந்தனர்.

இந்த நேரடி மோதல் நடந்த பின்பு ஹெலிகொப்டர் ஒன்று முகாமிற்கு வெளியே தரையிறங்கி சில நிமிடங்களின் பின் மேலெழுந்து சென்றது.

காயமடைந்த இராணுவத்தினர் இந்த ஹெலிகொப்டரில் எடுத்துச் செல்லப்பட்டிருக்கலாம் என்று நம்பப்படுகிறது. (ஓ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Wanted Immediately

Applications are being called for part time or full time Medical officer for the Unified Medical Service of the Jaffna Diocese of the Church of South India.

Salary negotiable.

Application close on 20-1-1987.

For further particulars contact:-

The Acting Medical Superintendent

GREEN MEMORIAL HOSPITAL,

Manipay. [A3418]


## ஓராண்டு நினைவஞ்சலி



அமரர் நமசிவாயம் கார்த்திகேசு அவர்கள்

இளைப்பாறிய அரசாங்க றெயில்வே உத்தியோகஸ்தர்

தோற்றம்: 04-11-1901
மறைவு: 12-01-1986
திதி 31-12-86

எங்கள் அன்புத்தெய்வமே! ஓராண்டு என்ன ஓராயிரம ஆண்டுகள் கழிந்தாலும் உங்கள் நினைவுகள் எங்கள் இதயங்களில் நிலைத்து நிற்கும். உங்கள் பிரிவைத் தாங்க முடியாமல் கண்ணீர் அஞ்சலி செலுத்தும் :

மனைவி, மகள் மற்றும் குடும்பத்தோர்.

குணேந்திராமில்,
மீசாலை வடக்கு

(C 6579)


வியாபாரம் பெருக விளம்பரம் செய்க


## இன்றைய பலன்

மாதம்: மார்கழி
திகதி: 16 (31-12-86)
கிழமை: புதன்
திதி: அமாவாசை
நட்சத்திரம்: பூராடம்

மேடம்: முன்னேற்றமான வாழ்வுண்டு. முதியோர் ஆசியுமுண்டு. தொழில் விருத்தியுமுண்டு.

இடபம்: முரசுமன் பேசுவோர் விடயத்தில் அவதானம வேண்டும். பண மோசடியும் நடக்கும் எதையும் நிதானமாய்ச்செயல்படுத்தவும்

மிதுனம்: காதலர்கள் மகிழ்ச்சியடைவர். எண்ணிய காரியம் நிறைவேற்றலாம் புதிய முயற்சிகளுக்கும் வழிகோலப்படலாம்.

கடகம்: எதிலும் தடுமாற்றம் தோன்றும ஆயுத பீடையுமுண்டாம் தொழிலிலும் வீழ்ச்சியுண்டு.

சிங்கம்; புண்ணிய காரியங்களில் ஈடுபடுவீர்கள். தன்மானமிகுதியுமுண்டு. தந்தை வழியாலும் வரவுண்டு. சுமாரான தினம்,

கன்னி; துணிச்சலுடன் காரியத்தைச் சாதிப்பீர்கள். சிலருக்கு வாகன லாபமுண்டு குடும்பத்திலும் மகிழ்ச்சியுண்டு

துலாம்: சகோதர சந்தோசமுண்டு உழைப்பினால் உயர்வுமுண்டு. இல்லச் சிறப்புமுண்டு

விருச்சிகம்: இன்னல்கள் பின்தொடரும். நம்பிக்கை மோசடியும் நடக்கலாம் தொழிலில் மந்தநிலையுமுண்டாம்

தனுசு: குடும்பத்திலும் பூசல்கள் தோன்றி மறையும் கொடுக்கல் வாங்கல் பிணக்குண்டு. பொருள் விரயமும் உண்டாம்.

மகரம்: வாழ்க்கையில் புதிய அபிவிருத்தி தோன்றும் புதுமணச்சிறப்புமுண்டு கல்வியில் உற்சாகமும் பிறக்கும்.

( -ம் பக்கம் பார்க்க)

## மாற்றம்

சுழிபுரம் செவ்.

சுழிபுரம் அபிவிருத்தி உப அலுவலகம் நடத்தும நூல் நிலையம். வாசிகசாலை ஆகியன அபிவிருத்தி அலுவலகம் இயங்கிவந்த கட்டிடத்திற்கு மாற்றம் செய்யப்பட்டுள்ளன.

அலுவலகம் வழக்கம்பரை அம்மன் கோவிலுக்குமுன்பாகவுள்ள புதிய கட்டிடத்திற்கு மாற்றப் செய்யப்பட்டுள்ளது. நூல்நிலைய வசதிகள் யாவும் திறப்படச் செயற்பட இது வாய்ப்பாகவுள்ளது.

## "கிறீன்பீல்ட்" சாம்பியன்

யாழ்ப்பாணம், புரசு.

யாழ். உதைபந்தாட்ட லீக்கின் ஆதரவில், யாழ் மாவட்ட விளையாட்டுக் கழகங்களிடையே 'யூபிலீகன்'' வெற்றிக்கேடயத்துக்காக நடாத்தப்பட்ட "நெக்சவுட" உதைபந்தாட்டப் போட்டியில் யாழ்ப்பாணம் "கிறீன்பீல்ட்" சழகம் சாம்பியன் படயத்தைப் பெற்றது.

மேற்படி போட்டியின் இறுதியாட்டத்தில், யாழ். நகர் "கிறீன்பீல்ட்" கழகமும் கொசமுவில் "பொற் உதி" ஐக்கியவிளையாட்டுக்கழகமும் மோதின இப்போட்டியில், கிறீன்பீட கழகம் சிறப்பாக விளையாடி 2-1 கோல்களால் வெற்றிபெற்றது.

இப்போட்டிக்கு பிரதம அதிதியாக கலந்து கொண்ட முன்னாள் உதைபந்தாட்ட சங்கக்காரியதரிசியும் முன்னாள் பலாலி ஆசிரியர் கலாசாலை அதிருமான திரு. ஈ கனகலிங்கம், விளையாட்டு வீரர்ளுக்கு அறிமுகம் செய்து வைக்கப்பட்டார்.

இப்போட்டி பாஷையூர் சென். அன்ரனிஸ் கழக மைதானத்தில் நடை பெற்றது. (வி)


முகவர் நிலையங்களுக்கான அங்கீகாரத்துடன் குடா நாட்டில் தொடர்ந்தும் சேவையாற்றுகின்றோம் என்பதை வாடிக்கையாளர்களுக்கு மகிழ்ச்சியுடன் அறியத்தருகின்றோம்.

## பிரயாண ஒழுங்குகள்

*டென்மார்க் *கனடா
*லண்டன் (U. K.) ★ஜெர்மனி

ஆகியநாடுகளுக்கு எமது முகவர் உடனுக்குடன் உங்களை அழைத்துச் செல்வார்.

சவூதி, குவைத்

கிளீனேர்ஸ், Gardeners, Labourers, Drivers இருப்பிடமும் சப்பாட்டு வசதிகளுடனும் வருமான ஒழுங்கு கூடிய கெதியில் செய்துதரப்படும்.

சிங்கப்பூர், குவைத்

பெண்களுக்கு வருமான ஒழுங்குகள் இருப்பிடமும் சாப்பாட்டு வசதியுடன் துரித கதியில் செய்து தரப்படும்.

பாஸ்போட். பொண்ட் (BOND), விசா, ரிக்கற் முதலியன துரித கதியில் செய்து தரப்படும்.

# GROUP ATLANTIC TRAVELS

இல. 163, ஆஸ்பத்திரி வீதி; யாழ்ப்பாணம்.
(அடைக்கலமாதா கோவில் முன்பாக (A 3223)



# புஸ்பா ரேட்ஸ் (எசன்ஸ் ஹவுஸ்)

எங்கள் அன்பர்கள், ஆதரவாளர்கள், வாடிக்கையாளர்கள் அனைவருக்கும் மங்களகரமான

**புதுவருட வாழ்த்துக்கள்!!!**

எம்மிடம் கேக் சாமான்கள், குளிர்பானத் தயாரிப்புக்கான சகல மூலப்பொருட்கள், ஐஸ்கிறீம் வகைக்கானவைகள், சோடாவைப் பொருட்கள், அப்பளிப்புப் பொருட்கள், கிளாஸ் வகைகள், றெஜிபோம் பெட்டிகள், பொலித்தீன் ரோல்கள். இன்தற்றிக் கற்பூரம், பரவின்வக்ஸ், வைற் ஒயில் முதலியன.

தரத்திலும், மற்றைய ஸ்தாபனங்களிலும் பார்க்க மலிவாகப் பெறக்கூடிய ஒரேஒரு ஸ்தாபனம்:-

"புஸ்பா ரேட்ஸ்"

யாழ். நகரில் முதன்முதலில் நிறுவப்பட்டதும், அநேக ஆதரவாளர்களின் நன்மதிப்பைப் பெற்றதும்

"புஸ்பா ரேட்ஸ்"

ஸ்தாபனம் ஒன்றே.

ஆதரவாளர்களின் தேவைகளைப் பல வருடங்களாக பூர்த்திசெய்து வருகிறோம்.

1987லிலும் சேவைசெய்யக் காத்திருக்கிறோம்.

விஜயம் செய்யவேண்டிய முகவரி:-

# புஸ்பா ரேட்ஸ்

(எசன்ஸ் ஹவுஸ்)

11/4 A, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி:- 24237. [A-3281]



# BECON

(ஸ்ரீதர் சினிமா முன்பாக) யாழ்ப்பாணம்.

விலங்கியல் — திரு A ஞானேந்திரன்
DAY-தொகுதிகள் — புதன் 1-00 மணி
பிறப்புரிமையியல் திரு தம்பிராஜா
சனி. ஞாயிறு 12-30
தாவரவியல் — திரு. சர்வானந்தா
இனப்பெருக்கம் சனி, ஞாயிறு 11-30
வினாவிடை-10-30

[A-3275]



## விற்பனை

வண்ணார்பண்ணை அமைதியான சுற்றுடல் யாவற்றிற்கும் வசதியான இடம் 2 புதிய வீடுகள் 3 பரப்புக் காணிக்குள்.

## தேவை

கே. கே. எஸ். றோட், பலாலி றோட், பருத்தித்துறை வீதி முகப்பைக் கொண்ட 2½ பரப்புக் காணி.

## தேவை

யாழ். இந்து மகளிர் கல்லூரி அண்மையில் எல்லா வசதிகளுடன் வீடு வாடகைக்குத் தேவை.

## மலிவு விற்பனை

காட்டு விறகு, உள்ளூர் விறகு, பிறவெட்டு விறகு 31-ம் திகதி வரை மலிவு விற்பனை.

# United Engineers Community Services Division.

சாயி மர அரிவு ஆலை,
91, இராமநாதன் வீதி,
கலட்டி, யாழ்ப்பாணம்.

[A-3410]


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தென்னை செய்கைக்கு மானியம்

வேலணை, செவ்வாய்.

தென்னை அபிவிருத்திச் சபை மானிய அடிப்படையில் தென்னைச் செய்கையாளருக்கு உதவி வழங்க முன்வந்திருக்கின்றது.

1987-ம் ஆண்டு முதல் ஒரு ஏக்கருக்கு புதிதாக தென்னை பயிர் நடுகையினை மேற்கொள்வோருக்கு மானிய அடிப்படையில் நலாயிரத்து அறுநூற்றி ஐம்பது ரூபாயும் மீள நடுகைக்கென நாலாயிரத்து எண்ணூற்று ஐம்பது ரூபாயும் கொடுக்கப்படுமெனவும் தென்னை அபிவிருத்திச்சபை உத்தியோகத்தர் தெரிவித்துள்ளார். (வா)

## அடகுவைத்தோர், வேதனம், ஒய்வூதியம் பெறுவோரின் கஷ்டங்களைப் போக்க மீண்டும் மக்கள் வங்கியை இயங்க வைக்கவும்

தெல்லிப்பழை. செவ்வாய்

மக்கள் வங்கிகள், கடந்த சில தினங்களாக மூடப்பட்டிருப்பதால் அவ்வங்கிகளில் தங்கள் நகைகளை அடகுவைத்தவர்களும், வங்கிமூலம் வேதனம், ஓய்வூதியம் பெறுபவர்களும் படும் இன்னலைக் குறித்தும், அதற்கான நிவாரணத்தை ஏற்படுத்தும் வகையிம் மக்கள் வங்கிகளை இயங்க வைப்பதற்கு உரியநடவடிக்கை எடுக்குமாறும் கோரி தெல்லிப்பழை, பல நோக்குக் கூட்டுறவுச் சங்கத் தலைவர் யாழ் அரசாங்க அதிபருக்கு 'மகஜரொன்றைச் சமர்ப்பித்துள்ளார்.

அவர் தனது மகஜரில் குறிப்பிட்டுள்ளதாவது:

மக்கள் வங்கிகள் கடந்த 18-12-86 தொடக்கம் திறக்கப்படாமல் இருப்பதை தாங்கள் அறிவீர்கள். மக்கள் வங்கியில் தங்கள் நகைகளை அடகு வைத்து. பணம் பெற்ற பலர் அந்தப் பணத்தைச் செலுத்தியும் இதுவரை அவர்களின் நகைகள் திருப்பிக் கொடுக்கப்படாமல் இருப்பது முறையற்ற செயலாகும் பலர் நகைகளை இரவலாகப் பெற்றும் அடைவு வைத்தார்கள். இதனால் பணம் பெற்றவரும், நகை அடகு வைக்கக் கொடுத்தவரும் பல் வேறு முறைகளில் பாதிக்கப்படுகின்றனர்.

சில மாதங்களுக்கு முன் சில வங்கிகளில் வைக்கப்பெற்ற வர்களின் நகைகள் திருப்பிக் கொடுக்கப்பட்டன. நகைகள் திருப்பிக் கொடுத்த தினங்களில் எமது சங்கம் அடகு நகைகளை திருப்பி எடுப்பதற்கு வந்தவர்களுக்கு வசதியாக குளிர் பானங்கள் இலவசமாக வழங்கி, அடகு நகை திருப்பிக் கொடுக்கும் வேலை நடைபெறுவதற்கு போதிய ஒத்துழைப்பு வழங்கியமையை தாங்களும் அறிவீர்கள் என்ன காரணத்தால் அடகு நகைகள் கொடுக்கும் வேலை குழப்பப்பட்டது என்பது எமக்கு விளங்கவில்லை அதற்கு பின் அடைவு நகைகள் திருப்பிக் கொடுக்கும் வேலை நடைபெறவில்லை இவ்வளவு காலம் பொறுத்திருந்த மக்கள் மீண்டும் போராடப் புறப்பட்டு விட்டார்கள். மக்கள் எவ்வளவு காலம்தான் சகித்துக் கொள்ள முடியும்? அவர்களின் கஷ்டங்களை பாதிப்புக்களை பொறுப்புள்ளவர்கள் உணரத் தவறியது மிகவேதனைக்குரியது இத்தகைய சூழ்நிலையில் அவர்களின் போராட்டம் நியாயமானதே.

இன்றைய இக்கட்டான சூழ்நிலையில் மக்கள் வங்கி இயங்காமல் இருப்பது பல இடர்பாடுகளை ஏற்படுத்தியுள்ளது. கிறிஸ்மஸ், புதுவருட ஆரம்பம், தைப்பொங்கல் போன்ற விசேட தினங்கள் வரும் காலகட்டத்தில் எத்தனையோபேர் தங்கள் வேதனம் ஓய்வூதியம், சேமிப்பு முதலியவற்றை வங்கிகள் ஊடாகப் பெறுபவர்கள் அவற்றைப் பெறமுடியாமல் கஷ்டப்படுகிறார்கள். பல நோக்குக் கூட்டுறவுச் சங்கங்கள் போன்ற பொது மக்கள் ஸ்தாபனங்கள் தங்களுடைய பணத்தை. கடன் வசதிகளைப் பெறமுடியாமல் பாதிக்கப்பட்டுள்ளன குறிப்பாக கூட்டுறவுச் சங்கங்கள் மக்களின் அத்தியாவசிய உணவுத் தேவையை நிறைவேற்ற முடிய மல் திண்டாடுகின்றன

ஆகவே அடகு நகைகளைத் திருப்பிக் கொடுக்கப்படாமையாலும், மக்கள் வங்கிகள் இயங்காமையினாலும் ஏற்பட்டுள்ள நெருக்கடியினை ஆராய்ந்து, அடகு வைத்தோரின் நியாயமான கோரிக்கைகளைக் கருத்திற்கெடுத்து மக்கள்வங்கிகள் இயங்கவேண்டிய அவசியத்தை உணர்ந்து இப்பிரச்சினையை உடனடியாக தீர்த்து வைக்கவேண்டிய நடவடிக்கைகளைத் துரிதப்படுத்தி எடுக்குமாறு கேட்டுக்கொள்கின்றேன். [கே]

## கைவிடப்பட்ட நிலையில் சைக்கிள்

சுண்டுக்குளி, செவ்.

யாழ். பழைய செயலகத்தில் கைவிடப்பட்ட நிலையில் துவிச்சக்கரவண்டியொன்று கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.

மேற்படி துவிச்சக்கரவண்டி யாழ். செயலக சைக்கிள் பாதுகாப்பு நிலையத்திலேயே கடந்த 27ம் திகதி பாதுகாவலரினால் கண்டுபிடிக்கப்பட்டு யாழ் தேர்தல் அலுவலகத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

இதனை உரியவர்கள் தகுந்த அத்தாட்சி காட்டி இவ்வலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

## மலேஷியாவில் மறைந்த யாழ்ப்பாண வள்ளல்

அண்மையில் தமது 98-வது வயதில் சிவபதமடைந்த கணபதிப்பிள்ளை சின்னப்பு மலேஷியாவில் தமது வாழ்வின் பெரும் பகுதியை செலவிட்ட போதும் தாய் நாட்டில் பிறந்த பொன்னுடாகிய யாழ்ப்பாணத்தின் சமூக முன்னேற்றத்தில் கண்ணும் கருத்துமாக விளங்கினார்.

இவர் அளவெட்டியைப் பிறப்பிடமாக கொண்ட பெரியார். பல பாடசாலைகளுக்கும் பொதுநிறுவனங்களுக்கும், குறிப்பாக அருணோதயா கல்லூரிக்கும் வேண்டிய நிதி உதவிகளை வழங்கி வந்தார்.

கொடை வள்ளலுக்கு உரித்தான குடும்பச் சிறப்பு அவருடைய எச்சத்தில் காணப்படுகிறது அவருடைய மருகர்நா, மாணிக் இடைக்காடர் அவருடைய பேரன், பேர்த்தி காலஞ்சென்ற பேராசிரியர் கைலாசபதி, திருமதி. சர்வமங்கலம் கைலாசபதி போன்றவர்களின் பொதுத் தொண்டில் காணலாம். (எ)


## முதலாவது பிறந்த தினம்

31-12-86



செல்வன் சின்னத்தம்பி சிறீதமார்

காங்கேசன்துறை ஆவளை தையிட்டியைச் சேர்ந்த சின்னத்தம்பி இந்திரமலர் தம்பதிகளின் செல்வப் புதல்வன் சிறீதமார் தனது முதலாவது பிறந்தநாளை இன்று குதூகலமாகக் கொண்டாடுகிறார்.

இவரை அப்பா.அம்மா, சகோதரர்கள், அம்மம்மா, அம்மப்பா மற்றும் உற்றார், உறவினர்கள் நீடூழி வாழ்கவென வாழ்த்துகிறார்கள்.

(C 6657)


## இன்றைய பலன்

(6ம் பக்கத் தொடர்ச்சி)

கும்பம்: வியாபார வீழ்ச்சியுண்டு குடும்பத்திலும் புயல் வீசும் உடல் நலத்தைப்பேணி நடக்கவும்.

மீனம்: நீர்த் தொழில் நிவர்த்தியுண்டு. குறிக்கோள் வெற்றியுமுண்டு. புத்திரர் மூலம் நன்மையும் கிடைக்கும்.


## திருமதி வே. ரவீந்திரன்


## தனியார்

(3ம் பக்கத் தொடர்ச்சி)

உபசெயலாளர்: க பா. இரத்தினவேல், பொருளாளர்: து: இராமச்சந்திரன், இ சித்தி விநாயகம், இ தவராஜா நிர்வாகசபை உறுப்பினர்களாகத் தெரிவுசெய்யப்பட்டனர்.

நிர்வாகசபையிலிருந்து ஒரு உறுப்பினரை தொழிலாளர் பிரதிநிதியாக நியமிப்பதெனவும் முடிவு செய்யப்பட்டது (கே)


## எமது புதிய வெளியீடுகள்

1. சிரஞ்சீவி ★ ராதா ★ செந்தில் "காட்டு ராஜா" (Camera Copy)
2. மோகன்பாபு ★ பல்லவி ★ அனுராதா "கலியுக காளிமாதா" (Pyramid Master)
3. ஜெமினி ★ K R. விஜயா ★ நாகேஸ் சின்னஞ்சிறு உலகம் (Pyramid Master)
4. ராதாரவி ★ சஞ்சேகுமார் ★ நளினி ஓலங்கள் (VGP Master)
5. Merrill's Marauders (War Film)

குணம் வீடியோ சென்ரர்

42, மணிக்கூட்டு வீதி, யாழ்ப்பாணம்.

தொலைபேசி: 23665

(A 3280)



## வீடியோ பட ரசிகர்களுக்கு ஓர் சலுகை

### விக்ரர் அன் சன்ஸ்

ஸ்தாபனத்தார் தங்கள் 25 வருட சேவையை முன்னிட்டு 1-1-87 நாளை வாடிக்கையாளர்கள் எடுக்கும் வீடியோ படங்களுக்கு வாடகை அறவிடப்படமாட்டாது என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவிக்கின்றார்கள.

யாழ்ப்பாணம் - சுன்னாகம் - திருநெல்வேலி

ஆகிய மூன்று கிளை ஸ்தாபனங்களிலும் பெற்றுக்கொள்ளலாம்.

எங்கள் சேவை

★ எல்லா விதமான மின்சார கொயில் றிவைன்டிங் வேலைகளும் மின்சார உபகரணங்கள் திருத்துதலும்

★ 2000த்திற்கு மேற்பட்ட வீடியோ படங்கள் பார்த்து மகிழ்வதற்கு கொடுத்தல்.

★ 36000த்திற்கு மேற்பட்ட இந்து,கிறிஸ்தவ, முஸ்லீம் பக்திப்பாடல்கள் சினிமாப் பாடல்கள் பதிவு செய்து கொடுத்தல்.

### விக்ரர் அன் சன்ஸ்

இல. 100, ஸ்ரான்லி வீதி,

யாழ்ப்பாணம். (C 6591)



## நெஸ்பிறே பிரியர்களுக்கு "நெஸ்லே" வழங்கும்

### புத்தாண்டுப் பரிசு

மீண்டும் ஒரு சந்தர்ப்பம் !!

நீங்கள் அருந்தும் செழுமையான முழு ஆடைப்பாலான நெஸ்பிறேயின மூன்று சாதாரண அல்லது இன்ஸ்ரன் பைக்கட் மேலுறைகளை அல்லது நெஸ்பிறே டின் வாங்கிய ரசீதை கீழ் அறிவுறுத்தப் பட்டிருக்கும் விற்பனையாளர்களிடம் கொடுத்து அழகிய மூவர்ண உலகப்படத்தினை முற்றிலும் இலவசமாகப் பெறுங்கள்.

கையிருப்பு சொற்பமாகவுள்ளதால் உங்கள் புத்தாண்டுப் பரிசுக்கு முந்துங்கள்

சிற்றி ஏஜென்சி

158, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.

சிற்றி மெடிக்கல்ஸ்

ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம்.

லட்சுமி நாதன் தெல்லிப்பழை.

(A 3420)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
NATIONAL THAMIL DAILY
31-12-86 புதன்கிழமை

# 'ரெலோ' தலைவர் செல்வம், பொபி தொடர்ந்தும உண்ணாவிரதம்

## ஏனையோர் கைவிட்டனர்

சென்னை டிச. 31

தமிழகத்தில் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ள 'ரெலோ' உறுப்பினர்களை விடுதலை செய்யக்கோரி அவ்வியக்க உறுப்பினர்கள் மேற்கொண்டு வந்த உண்ணாவிரதப் போராட்டம் மத்திய இணையமைச்சர் திரு. பி. சிதம்பரம் விடுத்த வேண்டுகோளின் பேரில் நேற்று கைவிடப்பட்டது எனினும் தமது கோரிக்கைகள் ஏற்கப்படும் வரை தாம் தொடர்ந்தும் உண்ணாவிரதத்தினை மேற்கொண்டுபோவதாக ரெலோ இயக்க தலைவர் திரு. கோ. செல்வமும், இராணுவ பிரிவு தலைவர் திரு பொபியும் தெரிவித்துள்ளனர்.

கடந்த சில வாரங்களாக தமிழ் நாட்டில் இடம்பெற்று வரும் வன்முறைச் சம்பவங்களுக்கும் இவ்வியக்க உறுப்பினர்களுக்கும் தொடர்பு இருப்பதாக கூறி தமிழ்நாடு பொலிஸார் ரெலோ இயக்க உறுப்பினர்கள் நாற்பது பேரை கடந்த வாரம் கைது செய்து தடுப்புக்காவலில் வைத்தது தெரிந்ததே.

இதனை எதிர்த்து இவ்வியக்க தலைவர் கே செல்வம் உட்பட ஐம்பது உறுப்பினர்கள் கடந்த சனிக்கிழமை சாகும்வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்திருந்தனர்.

தொடர்ந்து மூன்று நாட்கள் மேற்கொண்டு வந்த இவ் உண்ணாவிரதப்போராட்டம் இணையமைச்சர் திரு. பி. சிதம்பரத்தின் வேண்டுகோளின் பேரில் நேற்று கைவிடப்பட்டது. இதனையடுத்து திரு. சிதம்பரம் 'ரெலோ' தலைவர் திரு. செல்வத்துக்கு அனுப்பி வைத்துள்ள செய்தியொன்றில் உண்ணாவிரதத்தை கைவிடுமாறும் தமிழ்நாடு அரசுடன் ஒத்துழைத்து முதலமைச்சரின் ஆலோசனைப்படி நடந்து கொள்ளுமாறும் கேட்டுள்ளார். (இ)

## பரந்தனில் காயமடைந்த மூவர்

யாழ்ப்பாணம், புதன்

பரந்தனில் நேற்று முன்தினம் இடம்பெற்ற இராணுவ துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த மூவர் யாழ். ஆஸ்பத்திரியில் அனுமதிக்கப் பட்டுள்ளனர்.

காயமடைந்த மூவரும் ஆனைக்கோட்டையைச் சேர்ந்தவர்களாவார்கள்.

விசுவாசம் (வயது 20), கதிரவன் (வயது 19), லலி (வயது 21) ஆகியோர் யாழ் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டுள்ளனர். (வா)

## திடீர் காய்ச்சல்

புங்குடுதீவு, செவ்

புங்குடுதீவு அரசினர் வைத்திய சாலையிலும் தனியார் மருத்துவமனைகளிலும் காய்ச்சலினால் பாதிக்கப்பட்ட நோயாளர்கள் பலர் சிகிச்சை பெற்று வருகின்றார்கள்.

இந்த காய்ச்சலினால் சிறுபிள்ளைகளே பெருமளவில் பாதிக்கப்பட்டுள்ளனர்.

### வன்செயலால் பாதிக்கப்பட்ட

## வடபகுதி மாணவர்களுக்கு உதவ அறவழி போராட்டக்குழு திட்டம்

சாவகச்சேரி, செவ்வாய்

அண்மைக்காலத்தில் வடபகுதியில் இடம்பெற்ற வன்செயல்களின்போது குடும்பத் தலைவர்களை இழந்ததன் காரணமாக கல்வியினைத் தொடர முடியாமல் இருக்கும் பிள்ளைகளின் கல்விக்கு உதவ அறவழிப் போராட்டக்குழு திட்டம் ஒன்றினை அறிமுகப்படுத்தவுள்ளது.

இத்திட்டத்தின் மூலம் நூறு பாடசாலை மாணவர்களுக்கு தொடர்ந்து மூன்று வருடங்களுக்கு கல்விவளர்ச்சியில் உதவப்படும்.

இத்திட்டத்தில் தம்பிள்ளைகளை இணைத்துக்கொள்ள விரும்புவோர் பாடசாலைச் செல்பவரின் பிறப்புச் சாட்சிப் பத்திரம் பாடசாலை அதிபரின் உறுதி மொழிக்கடிதம் குடும்பத்தலைவரின் இறப்புப் பத்திரம் இரண்டு புகைப்படம் ஆகியவற்றுடன் மேற்படி குழுவினருடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர். (ஒ)

## இந்தியா 3—324

### மொகிந்தர் - 135; வெங்சாகர் - 115

புதுடில்லி டிச. 31

இந்திய இலங்கை அணிகளுக்கிடையில் நாக்பூரில் நடைபெற்றுவரும் இரண்டாவது கிரிக்கெட் டெஸ்ட்டின் மூன்றும் நாள் முடிவில் இந்திய அணி மூன்று விக்கெட் நஷ்டத்துக்கு 324 ஓட்டங்களை பெற்றது.

இரண்டாம் நாள் முடிவில் இந்திய அணி ஒரு விக்கெட் இழப்பிற்கு 54 ஓட்டங்களை பெற்றிருந்தது. நேற்றைய ஆட்டத்தில் ராமலிங்கப்பா 53 ஓட்டங்களையும் மொஹிந்தார் அமர்நாத் 135 ஓட்டங்களையும் வெங்சாகர் ஆட்டமிழக்காமல் 115 ஓட்டங்களையும் கவாஸ்கர் ஆட்டமிழக்காமல் 10 ஓட்டங்களையும் பெற்றனர்.

மொஹிந்தர் அமிர்நாத் நேற்றைய ஆட்டத்தில் 11 வது டெஸ்ட் சதத்தையும் நாலாயிரம் ஓட்டங்களை பெற்ற நாலாவது இந்திய ஆட்டக்காரர் என்ற பெருமையையும் பெற்றார். வெங்சாகர் பெற்ற 115 ஓட்டங்கள் அவரது 13 வது டெஸ்ட் சதமாகும்.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி முதல் நாளிலேயே சகல விக்கெட்டுகளையும் இழந்து 204 ஓட்டங்களை பெற்றது. (சி)

## கிளிநொச்சி

(1ம் பக்கத் தொடர்ச்சி)

பாகிச் சூட்டிற்கிலக்காகிப் பலியானார். இவரது சடலம் விடுதலைப் புலிகளால் மீட்கப்பட்டு உறவினர்டம் ஒப்படைக்கப்பட்டது

இதேவேளை பரந்தனை நோக்கி கிளிநொச்சி, ஆனையிறவு இராணுவம் திங்கள் இரவும் பீரங்கி, ஷெல் பிரயோகங்களை மேற்கொண்டது. இதனால் பொதுமக்கள் மத்தியில் பெரும் பதற்றமும் பீதியும் நிலவியது.

## உயிலங்குளத்தில்

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

னர். இத்தாக்குதலிலும் படையினர் தரப்பில பலத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிய வருகிறது.

இத்தாக்குதலின் பின் ஹெலிகொப்டர் ஒன்று சம்பவம் நடந்த இடத்தில் தரையிறங்கியதாகவும், இதில் காயமடைந்தவர்களும், கொல்லப் பட்டவர்களும் எடுத்துச்செல்லப்பட்டதாகவும் நம்பப்படுகிறது.

### ஹெலி ரோந்து

இத்தவேளை ஹெலிகொப்டர் ஒன்று இப்பகுதிகளில் தீவிர ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்தது.

இதுஇவ்வாறிருக்க மன்னாரில் நேற்றுஹார்த்தால் அனுஷ்டிக்கப்பட்டதனால் அப்பகுதியுடனான போக்குவரத்துத் தொடர்பு துண்டிக்கப்பட்டிருந்தது. (ஓ)

# மரண அறிவித்தல்

### செல்லப்பா தம்பிஐயா
(ஓய்வுபெற்ற விதானையார்)

கோவிலாக்கண்டியைச் சேர்ந்த ஓய்வுபெற்ற விதானையார் செல்லப்பா தம்பிஐயா காலமானார். அன்னார் தங்கம்மாவின் அன்புக் கணவரும், நாகநாதன் [புகையிரத நிலைய அதிபர், ஆனையிறவு] குமாரதாசன் [பணிப்பாளர், சிறுகைத்தொழில் அமைச் ] அன்னரத்தினம் அமுதரத்தினம், சாந்தநாயகி, சண்முகதாசன் [சுவிற்சர்லந்து] ஆகியோரின் அன்புத் தந்தையும், யோகேஸ்வரி, ரதி அருட்பிரகாசம் [ஜேர்மனி] கணேசமூர்த்தி [வர்த்தகர் பூநகரி] தவராஜா [வர்த்தக முகாமையாளர், யா. ப. நோ. கூ. சங்கம்] ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரது ஈமக்கிரிகைகள் 31-12-86 புதன்கிழமை பகல் 1-00 மணிக்கு சேரதீவுவீதி, கோயிலாக்கண்டியிலுள்ள அன்னாரது இல்லத்தில் நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: தவராஜா

[C6659]

### வைத்திலிங்கம் குழந்தைவேல் [K. V]
[Technical Assistant - Irrigation Dept, Vavuniya]

வைத்திலிங்கம் குழந்தைவேல் காலமானார். இவர், சங்குவேலி காலஞ்சென்ற வைத்திலிங்கம் பாலாம்பிகை தம்பதிகளின் மகனும், வல்வெட்டித்துறை ஸ்ரீ ராஜேஸ்வரியின் அன்புக்கணவரும், தேவகி, மைதிலி, உதயசங்கர் ஆகியோரின் அன்புத் தந்தையும், மட்டக்களப்பு விவசாய உத்தியோகத்தர் V. பத்மநாதன், திருமதி V மாணிக்கவாசகர், திருமதி N முத்தக்குமாரு. திருமதி M லிங்கநாதபிள்ளை, திருமதி M. சிவபாதசுந்தரம், திருமதி M. சண்முகலிங்கம், திருமதி V சண்முகதாஸ், திருமதி S. ரகுநாதன் ஆகியோரின் அன்புச் சகோதரரும், வல்லிபுரம, சாமி, அரியரட்ணம் ஆகியோரின் சகலனும் ஆவார் அன்னாரின் தகனக்கிரிகைகள் இன்று [31-12-86] புதன் கிழமை காலை 9 மணிக்கு வல்வெட்டித்துறை ஊறணி மயானத்தில் நடைபெறும்.

தகவல்:
திருமதி குழந்தைவேல்

செணியபை:
வல்வெட்டித்துறை. [C6658]

### சின்னையா செல்லத்துரை
(Retied forest Ranger)

கொக்குவில் திரு. சி செல்லத்துரை காலமாகிவிட்டார் அன்னார் காலஞ்சென்ற சொர்ணலக்ஷ்மியின் அன்புக்கணவரும், காலஞ்சென்ற ஜெயசோதி, சத்தியபாமா, ருக்மணி ஆகியோரின் அன்புத்தந்தையும். காலஞ்சென்ற மாணிக்கநடராசா வைரவிப்பிள்ளை, நடராஜன் ஆகியோரின் அன்பு மாமனுமாவார். அன்னாரின் ஈமக்கிரியைகள் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று 29-12-86 தகனக்கிரியை கொக்குவில் மயானத்தில் திங்கட்கிழமை அன்று நடைபெற்றது. இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் மு. நடராஜன்

பழைய தபால் கந்தோர்
44 கே. கே. எஸ். வீதி கொக்குவில். (C-6654)

# மரண அறிவித்தல்

### Mr. SHANTHIKUMAR THIAGARAJAH

AGROMAC Ltd Director Mr. SHANTHIKUMAR THIAGARAJAH அவர்கள் காலமானார் அன்னாரின் மரண கிரியைகள் 31-12-86ல் கொழும்பில் அவரது இல்லத்தில் நடைபெற்று இறுதிகிரியைக்காக கனத்தை மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். என்பதை வாடிக்கையாளர்க்கு அறிய தருகின்றோம்.

தகவல்: தி. பொ. அம்பிகைபாகன், பண்டத்தரிப்பு

(C 6663)

### கிருஷ்ணர் கணேசர்

சண்டிலிப்பாய் வடக்கை பிறப்பிடமாகவும், தெல்லிப்பழையை வசிப்பிடமாகவும் கொண்டவருமான கிருஷ்ணர் கணேசர் Railway Guard K K S (29-12-86) திங்கட்கிழமை காலமாகிவிட்டார். அன்னார் நவாலியைச் சேர்ந்த ராஜராஜேஸ்வரியின் (சரோஜினி) அன்புக் கணவரும், உஷா, மகிந்தா (France), கரிகாலன் (கிறேக்), உமா, காண்டீபன், அகிலா, அகிலன் ஆகியோரின் அன்புத் தந்தையும். சீனிவாசகம் (Retd Jail Officer), காலஞ்சென்ற தவமணி தர்மாவரதர் மாணிக்கவாசகர் (Retd Health Inspector, Canada) ஆனந்தக்கிருஷ்ணன் (Post Office Vavuniya) ஆகியோரின் அன்புச சகோதரனும், நவாலி திருமதி மகேஸ்வரி சாவணபவான், சண்முகதாசன் (சச்சி) (Accountant Zambia) ஆகியோரின் அன்பு மைத்துனருமாவார் இறுதிக்கிரியைகள் தெல்லிப்பழையில் (இன்று) 31-12-86 புதன்கிழமை காலை நடைபெறும். உற்றார், உறவினர், நண்பர்கள் இவ்வறிவித்தலை ஏற்றுக் கொள்ளவும். C-6660

### சின்னத்தம்பி விசுவரத்தினம்

கொக்குவில் மேற்கைச் சேர்ந்த சின்னத்தம்பி விசுவரத்தினம் காலமானார். இவர் காலஞ்சென்ற மகேஸ்வரியின் அன்புக்கணவரும்,வி. இராமச்சந்திரன் (முகாமையாளர், மானிப்பாய் பரிஷ் ப. நோ கூ ச), வி பாலச்சந்திரன் (கனடா), திருமதி இ சாரதா, செல்வி வி. லலிதா ஆகியோரின் தகப்பனாரும், திரு. சி சண்முகநாதனின் சகோதரரும், திரு. சு இராசலிங்கத்தின் (ஆசிரியர் மாமனாரும் ஆவார். அன்னாரின் ஈமக்கிரியைகள 31-12-86 (இன்று) புதன்கிழமை மாலை 3-00 மணியளவில் நடைபெற்று கோம்பையன்மணல் மயானத்தில் தகனம்செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் யாவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்: வி. ராமச்சந்திரன்.

[C-6664]

இப்பத்திரிகை 'ஈழநாடு' லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்கு வீதி, 63-ம் இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1986-ம் ஆண்டு டிசம்பர் மாதம் 31-ம் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது
Registered as a News Paper at the General Post Office Sri Lanka under number B/1003/81 Eelanadu P. O. Box 49 Telegrams: Eelanadu
Telephone: 22389—24126

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org